Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 16 (05.06.2004) சனிக்கிழமை இதழ் :247



## மூத்த பத்திரிகையாளர் கோபுவை தேசிய தலைவர் பிரபா கௌரவிப்பு

(கிளிநொச்சி)

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றி தமிழ்த் தேசியத்திற்கும், தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றிய மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) தமிழீழத் தேசியத் தலைவரால் நேற்று, பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக அரசியற்துறையினர் வெளியிட்ட அறிக்கையில் -

எழுத்துத் துறையில் இவரின் எழுத்து நடையானது, கருத்துக்களின் முன்வைப்பு, முன்வைத்த கருத்துக்களுக்கு ஏற்ற தலைப்பால் மிகவும் வித்தியாசமானதாகவும், கூர்மைப்பட்டதாகவும் இருக்கும்.

அதேநேரத்தில் வாசகர்களின் மனங்களைக் கவ்விப்பிடித்து அவர்களை அதன்பால் சிந்திக்கத் தூண்டும் ஈர்ப்பினை கொண்டதாகவும் இருக்கும்.

வாசகர் பரப்பில் இருக்கக்கூடிய எல்லாத் தரப்பினரையும் கருத்தில் எடுத்து எளிய நடையில் புரியும் வகையில் சொற்களையும், சொற்தொடர்களையும் கையாண்டு ஆக்கங்களைப் படைத்துள்ளார்.

இதன்மூலம் எல்லா மக்களையும் போராட்டத்தின்பால் சிந்திக்கத் தூண்டிய சேவையை மிகத்திறம்பட ஆற்றியுள்ளார்.

இவரின் இந்தச் சேவையைப் பாராட்டி தமிழீழ தேசியத்தலைவர் புலிச்சின்னம் பதித்த விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

பத்திரிகையாளனுக்கு இருக்கவேண்டிய முக்கிய பணியாகிய எதிர்காலத்தை நிகழ்காலத்துடன் இணைத்துக் கருத்துக்களை முன்வைக்கும் சிறப்பியல்பு இவரிடம் ஆழமாகக் குடிகொண்டிருந்தது.

இதனால் அவரது ஒவ்வொரு படைப்புக்களும் அந்தப் படைப்புக்களின் தலைப்புக்களும் உயிரோட்டமுள்ளவையாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளில் குழப்பம்; ஜனாதிபதி சந்திரிகாவே காரணம்!

## பி.பி.சி பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

சமாதான முயற்சிகள் குழப்பமான சூழலில்தான் இருக்கின்றன, ஆரம்பத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான நம்பிக்கையான சூழல் இருந்தது.

ஆனால், ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட விடயங்களில் ஜனாதிபதி தீர்க்கமான ஒரு பதிலைத் தராததால், இந்தப் பேச்சுக்கள் மீளத் தொடங்குவது பற்றி முடிவுகள் இழுபட்டுக்கொண்டு செல்வதாக,

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

## பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்கு 52 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

அரசசேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 27 ஆயிரம் பட்டதாரிகளை நியமிக்கும் திட்டத்தின் கீழ் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு 52 ஆயிரத்து 989 பேர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிய தங்ககம் தேசிய தலைவரால் திறப்பு!

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தங்ககத்தை தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் நேற்று திறந்து வைத்து, மூதாளர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மூதாளர் பேணலகத்தில் நேற்று

பாளர் பொன் தியாகம் ஏற்றிவைக்க அதனைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட பெண்களுக்கான தங்ககத்தை தமிழீழத் தேசியத் தலைவர் திறந்து வைத்தார்.

மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத்

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

**இந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -**

எங்களைப் பொறுத்தவரையில் அனுசரணையாளர்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாக எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

கடந்த இரண்டரை வருடங்களாக இந்தப் பேச்சுக்களில் எந்த வித முன்னேற்றமும் இல்லை. மக்களுக்கு நன்மைகளும் கிடைக்கவில்லை. கடந்த காலப்பேச்சுக்கள் குழப்பமடைந்ததற்குரிய காரணங்களைக் கண்டறிந்து புதிய சூழலில் பேச்சுக்களை ஆரோக்கியமாக வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும் என்று எங்களின் தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளை தெரியப்படுத்தி இருக்கிறோம்.

அந்த அடிப்படையில் இந்தப் பேச்சுக்களை தொடங்க ஆர்வமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள மூதாளர் பேணலகத்தில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர், சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொதுச்சுடரினைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப் மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் தனது துணைவியாருடன் கலந்து கொண்டு மூதாளர்களுடன் கலந்துரையாடியதோடு அவர்களுக்கு அன்புப் பரிசில்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில், கடற்புலிகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று வயது மகனை அடித்துக் கொன்ற தந்தை

## வடமராட்சிப் பகுதியில் பயங்கரம்

(வடமராட்சி)

குடும்பஸ்தர் ஒருவர் தனது பிள்ளையைக் காலில் பிடித்து தலைகீழாகத் தூக்கி நிலத்துடன் அடித்துக் கொன்றதுடன் தனது மனைவியையும் மாமியாரையும் பலமாக வெட்டிக் காயப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் நேற்று வல்லிபுரக் குறிச்சி என்ற இடத்தில் இடம் பெற்றது. இச்சம்பவத்தின்போது 3 வயதான ராஜகுமார் ராஜ்குமார் என்ற சிறுவனே அடித்துக் கொலை செய்யப்பட்டவராவர். 22 வயதான ராஜகுமார் ஜெயந்திமாலா, 51 வயதான அப்பையா ரஞ்சிதமணி ஆகிய இருவரும் பலத்த வெட்டுக்காயத்திற்கு உட்பட்டவர்களாவர். மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

டிக்கோயா பகுதியில் வசித்துவந்த உயிரிழந்த சிறுவனின் பெற்றோரிடையே ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக ராஜகுமார் தனது பிள்ளையைக் கடத்திக் கொண்டு யாழ்ப்பா ணத்திற்கு வந்திருக்கின்றார்.

இவரை இவரது குடும்பத்தினர் தேடியபோது தான் யாழ்ப்பாணத்தில் இருப்பதாகவும் யாழ்ப்பாணம் வருமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவரது மனைவி சில

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி - வதிரிப் பகுதியில்

# வெட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

(வடமராட்சி)



சடலத்தைப் பார்வையிடும் பொலிஸார்

வடமராட்சி - வதிரி இரும்பு மதவடியில் உள்ள தோட்டவெளி மடத்தில் இருந்து - கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நவிண்டில் கரணவாய் மத்தி கரவெட்டியைச் சேர்ந்தவருமான, சந்திரமோகன் (வயது 37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

சடலமாக மீட்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில், தமது வீட்டிலிருந்து புறப்பட்டு கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் உள்ள தமது சர்பத் கடைக்குச் சென்றுள்ளார்.

நேற்றுக்காலை இவர் வீடு திரும்பாததையடுத்து - இவரைத் தேடிச்சென்ற மனைவி, வதிரி - இரும்பு மதவடி மடத்தில் ஒருவர் வெட்டுக்காயங்களுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR Your friend in the skies...

(சி/2489)

# மெல்லக்கற்கும் மாணவரை மேம்படுத்த புதிய செயற்திட்டம் அங்குரார்ப்பணம்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் மெல்லக்கற்கும் நிலையில் உள்ள மாணவர்களுக்கான புதிய செயற்றிட்டம் ஒன்றின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ்.கல்விவலயத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதி யுடிற் புறுனோ, வட-கிழக்குமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சா.தியாகலிங்கம், யுனிசெவ் நிறுவன செயற்றிட்ட அலுவலர் ஸ்ரீஸ்கந்தராஜா, வலயக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் - 8 இல் உள்ள மாணவர்களில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் மெல்லக்கற்கும் நிலையில் உள்ள 6 ஆயிரம் மாணவர்களை நிலையறி பரீட்சையின் மூலம் தெரிவுசெய்து இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் இருந்து 200 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 4.5 மில்லியன் ரூபா நிதியுதவியை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 5 கைநூல்கள் வழங்கப்படவுள்ளன.

# சமூகப்பாதுகாப்புத் திட்ட மீள் ஒழுங்குக் கூட்டம்

சமூகப்பாதுகாப்புத் திட்டத்தை மீள்ஒழுங்கு செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

முழுநாள் கருத்தரங்காக இடம்பெறவுள்ள இந்த செயலமர்வில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர்க்கு ஓய்வூதியம் வழங்குவதென்பது தற்போதைய சூழலில் அவசியமானதென்பதால் இது குறித்து ஆலோசிக்கும் முகமாகவே மேற்படி கூட்டம் நடைறெவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.


## ராஜா யாழ்ப்பாணம்.

3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த




காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
(கில்லி) கில்லி



(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

## நிறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, திரிஷா, ரகுவரன், விவேக்
நடித்த
அலை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2621)

## The Royal College

மாணவர்களே ஆங்கிலத்தில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுகின்றீர்களா?
கவலை வேண்டாம்.
Spoken English, Grammar.
By - விக்கினேஸ்வரன் ஆச்சாரி,
426(302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2441)


# இரசாயன உரங்களின் விலை விபரம் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவால் அறிவிப்பு

விவசாயிகளின் நலன் கருதி இரசாயன உரங்களின் ஆகக்கூடுதலாதன உயர் விலை தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட உரங்களின் விலைகளை விட கூடுதலான விலைகளில் விற்கவேண்டாம் எனவும் விலைக்கட்டுப்பாடு பிரிவு அறிவித்துள்ளது.

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர். | வன்னி விற்பனை விலை | | யாழ்.விற்பனை விலை | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| யூரியா (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 630. | 00 | 645. | 00 |
| | கேலிஸ் | 630. | 00 | 645. | 00 |
| | சீ.ஐ.சி | 630. | 00 | 645. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 606. | 00 | 620. | 00 |
| அமோனியா (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 945. | 00 | 960. | 00 |
| | சீ.ஐ.சி | 1135. | 00 | 1150. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 1065. | 00 | 1080. | 00 |
| ரீ.எஸ்.பி (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 1365. | 00 | 1380. | 00 |
| | சீ.ஐ.சி | 1535. | 00 | 1550. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 1415. | 00 | 1430. | 00 |
| எம்.ஓ.பி (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 1180. | 00 | 1190. | 00 |
| | சீ.ஐ.சி | 1350. | 00 | 1170. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 1365. | 00 | 1180. | 00 |
| வி.1 (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 1235. | 00 | 1250. | 00 |
| | சீ.ஐ.சி | 1260. | 00 | 1275. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 1275. | 00 | 1290. | 00 |
| ரீ.டி.எம். (50 கிலோ) | ஈ.ரி.ஏலங்கா | 955. | 00 | 1055. | 00 |
| | சீ.ஐ.சி | 975. | 00 | 1095. | 00 |
| | இலங்கை உரம்(லக்போற) | 955. | 00 | 970. | 00 |


## SRI LANKA RED CROSS SOCIETY

**Health and Psychosocial Programme**
Jaffna District

We hereby regret to inform you, that due to changes in the programme structure, we will not be calling for interviews on the advertised post as Secretary advertised in the newspaper on the 21st of April 2004.

We apologise for your inconvenience.

Director General,
c/o Chairman,
Sri Lanka Red Cross Society,
Jaffna District. (751)

## வீடு வாடகைக்கு உண்டு

அரச, தனியார் நிறுவனம் நடத்துவதற்கு உகந்த , யாழ். நகருக்குள் உள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். ஆவல் உடையோர் 12- 06- 2004 இற்கு முன்னர் முழுவிபரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல - 28
மே/பா .நமது ஈழநாடு
267, நாவலர் வீதி
யாழ்ப்பாணம். (749)

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு ஒரு மணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்

சந்தேகம் வேண்டாம்.
இதுவரை இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சி பெற்று நிருபிக்கப்பட்ட பாடநெறி

இடம் :- றிமர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ் மத்திய கல்லூரி அருகில்
காலம் :- 05.06.2004, 06.06.2004, மற்றும் 07.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

வகுப்புகள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்து கொள்ளலாம்)
காலை 9.00 முதல் 10.00 காலை 10.00 முதல் 11.00
மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00
மாலை 4.00 முதல் 5.00 மாலை 5.00 முதல் 6.00

**அனுமதி இலவசம்**

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப் பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள.

**அனைவரும் கலந்து கொள்ளலாம்**

கலந்து கொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்

குறிப்பு :- கடந்த காலங்களில் வகுப்புக்களில் கலந்து சான்றிதழை பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம். எமது பாட நெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/2639)

Psalm Institute of Engineering and Technology


## மாநகரசபை, யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல் 2004

கீழ்க்குறிப்பிட்டுள்ள வீதி வேலைகளுக்கான கேள்விகள் “இக்ராட்” நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன. பதிவு செய்யப்படவேண்டிய தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி :- 21.06.2004 பி.ப 3.00மணி
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :- 22.06.2004 ந.ப 12.00 மணி
கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி :- 22.06.2004 பி.ப 2.00 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும், அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த தரம் | மீளளிக்கக்கூடிய வைப்பு கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|---|
| 01. நாயன்மார்கட்டு வீதி | 08 | 10700/- | 500/- |
| 02. முருகமூர்த்தி வீதி | 09 | 5700/- | 500/- |
| 03. புங்கங்குளம் வீதி | 09 | 7300/- | 500/- |
| 04. சேர் துரைச்சாமி வீதி பெட்டி மதகு | 09 | 5700/- | 500/- |
| 05. அரச வீதி | 10 | 3000/- | 500/- |
| 06. பண்டாரக்குளம் வீதி | 10 | 2600/- | 500/- |
| 07. முதலியார் வீதி | 10 | 2300/- | 500/- |
| 08. பிரப்பங்குளம் வீதி | 10 | 3000/- | 500/- |
| 09. கற்பக விநாயகர் வீதி | 10 | 2700/- | 500/- |
| 10. ஆறுகால்மடம் பழம் வீதி பெட்டி மதகு | 10 | 3500/- | 500/- |
| 11. கந்தப்பசேகரம் வீதி பெட்டி மதகு | 10 | 4100/- | 500/- |
| 12. மணிக்கூட்டு வீதி ஒழுங்கை | 10 | 2900/- | 500/- |
| 13. பற்றிக்ஸ் வீதி | 10 | 3600/- | 500/- |
| 14. கோவில் வீதி ஒழுங்கை | 10 | 2500/- | 500/- |
| 15. கதிட்ரல் வீதி | 10 | 2200/- | 500/- |
| 16. அத்தியடி புது வீதி | 10 | 1700/- | 500/- |
| 17. மணிக்கூட்டு வீதி | 10 | 1600/- | 500/- |
| | | 65100/- | 8500/- |

மாநகரசபை
யாழப்பாணம்
03.06.2004.

(சி/2642)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# புலிகளின் முன்நிபந்தனைகளை கைவிடுமாறு அழுத்தம் கொடுக்கவும்

## சர்வதேச சமூகத்திடம் விமல் வீரவன்ச வேண்டுகோள்



சமாதானப் பேச்சுவார்த்தையென்பது தமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலேயே நடத்தப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் விதிக்கும் முன்நிபந்தனையை சர்வதேச சமூகம் உட்பட்ட சகல தரப்பும் அழுத்தம் கொடுத்து கைவிடச் செய்யவேண்டும்.

இவ்வாறு, ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் இறைமை மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்யாமல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. தற்போது சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் - விடுதலைப் புலிகள் விதிக்கும் முன்நிபந்தனையாகும்.

எமது அயல் நாடான இந்தியா கூட விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்தியா உட்படப் பல நாடுகள் நிரந்தரத் தீர்விற்கு இடைக்கால நிர்வாக சபை அடிப்படை என உடன்படுகின்றன. ஆனால், இந்த நிர்வாக சபை தொடர்பாக எவரும் கவனிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றக் கலைப்பின் பின் வழங்கப்பட்ட நியமனங்கள் ரத்து

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் நடைபெற்ற நாள் வரையான அரச நிறுவனங்களில் வழங்கப்பட்ட சகல நியமனங்களும் ரத்துச் செய்யப்படவுள்ளன.

அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை எடுத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் வேளையில் இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படக்கூடாது. 2001 ஆம் ஆண்டு தேர்தல்களுக்குப் பின்னர், ஆட்சியைப் பொறுப்பேற்ற அரசாங்கம் இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுத்ததன் காரணமாக, பலரின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

எனினும், இந்தக் காலப்பகுதியில் அடிப்படை அம்சங்களுக்கு அமைய வழங்கப்பட்ட நியமனங்கள் குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### எந்தத் தடை வந்தாலும்

# பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை நோர்வே தயாரிக்க முடிவு!

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தடைப்பட்டுப் போயுள்ள விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை, மீள ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை எந்தத் தடைவந்தாலும் தயாரிப்பதென, நோர்வே உடன்பட்டுள்ளதாக, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சார்பாக தலைமைப் பேச்சுவார்த்தையாளராக இருந்த ஜி.எல். பீரிஸ் நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்தமாதம் நோர்வேயின் தூதுவர்களை தான் சந்தித்த வேளை அவர்கள் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் திகதிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தனர் என பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.



## அகதிகள் 6 பேர் தலைமன்னாரை வந்தடைந்தனர்

தமிழ்நாட்டின் மானாமதுரை அகதிமுகாமில் தஞ்சம் கோரியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் அறுவர் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் தலைமன்னாரை வந்தடைந்த இவர்களுள் இரண்டு ஆண்களும், நான்கு பெண்களும் அடங்குவர்.

தலைமன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிபதி ஜனாப் எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் ஆஜர்படுத்தியவேளை, இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (201)

### ஐக்கிய நாடுகள் சபையிடம்

# சர்வதேசக் கடல் எல்லையை விரிவுபடுத்துமாறு அரசு கோரும்!

(கொழும்பு)

சர்வதேசக் கடற்பரப்பை மேலும் விரிவுபடுத்துமாறு ஐக்கியநாடுகள் சபையிடம் கோரவிருப்பதாக, மீன்பிடி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் சர்வதேச கடற்பரப்பு தற்போது கரையில் இருந்து 200 கடல்மைல் தூரம் வரையுள்ளது. அந்தக் கடற்பரப்பை விரிவுபடுத்துவதன் மூலமாக மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனியார் நிறுவனம் ஒன்று இதற்கான தகவல்களை அமைச்சிற்கு வழங்கிவருகின்றது.

இலங்கை சர்வதேசக் கடற்பரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளில் மீன்பிடிக்க வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சில நிறுவனங்கள் அனுமதி வழங்கப்பட்ட எல்லையைத் தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முதலீட்டுச் சபையின் உயரதிகாரிகள் இருவர் பதவிநீக்கம்

இலங்கை முதலீட்டுச் சபையின் உயர் அதிகாரிகள் இருவர் பதவிகளிலிருந்து - கைத்தொழில், சுற்றுலா, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவினால் நீக்கப்பட்டுள்ளனர்.

முதலீட்டுச் சபையின் நிர்வாகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா மற்றும் சிரேஷ்ட ஆலோசகர் ஜி.என்.பாத்திகிரி கொரல ஆகிய இருவருமே பதவி நீக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரது நியமனங்கள் அரசியல் ரீதியானதெனவும், மாதமொன்றுக்கு இருவரும் ஒரு லட்சம் ரூபாவை ஊதியமாகப் பெறுவதாகவும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரையும் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க பதவி நீக்கம் செய்தமையானது, முதலீட்டுச் சபையின் சுத்திகரிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியென அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், முதலீட்டுச் சபையில் உள்ள பல அதிகாரிகளுக்கு எதிராக அடுத்த சபையின் கூட்டத்தில், அமைச்சர் பண்டாரநாயக்க கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளாரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை நகர் பகுதியில் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் திறப்பு!

திருகோணமலை பிரதான வீதியில் விடுதலைப் புலிகளின் புதிய அரசியற்துறை அலுவலகம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த அரசியற்துறை அலுவலகம் திறக்கப்பட்டமையானது விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கே என, திருகோணமலை மாவட்ட நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் திறப்பு விழா நிகழ்வில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

முன்னதாக அலுவலகத் திறப்பு நிகழ்விற்கான ஈகச்சுடரினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ்.கௌரிமுகுந்தன் ஏற்றினார். திருமலை மாவட்ட நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் அலுவலகத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார்.

அலுவலகத்தை கே.மாதவராஜா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடத்தில் உடனடியாக மீளக்குடியமர்த்துவதே இந்த அலுவலகத்தினூடாகச் செய்யும் முதற் பணியென நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் தெரிவித்தார்.

இந்த திறப்பு விழா நிகழ்வில் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.






திருகோணமலை - பாட்டாளிபுரத்தில் நேற்றுமுன்தினம் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் பெயர்ப்பலகையை திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம் திறந்துவைப்பதையும், மருத்துவ மண்டபத்தை தளபதி கேணல் பானு திறந்துவைப்பதையும் காணலாம்.

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகள் 14 ஆம் திகதி!

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர்களுக்குமான விரிவுரைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. எனவே மாணவர்கள் அனைவரும் 13 ஆம் திகதியே தமது விடுதிகளுக்குச் சமுகமளிக்க வேண்டுமென பல்கலைக்கழக பதில் உபவேந்தர் எஸ்.ரவீந்திரநாத் அறிவித்துள்ளார்.

முன்னதாக முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# விளக்க மறியலில் இருந்த இந்திய மீனவர் விடுதலை!

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர் ஒருவர் சட்டமா அதிபரின் திணைக்களப் பணிப்புரைக்கமைய நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

தமிழ்நாடு - இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஜோன் கென்னடி என்ற மீனவர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி இந்தியாவிலிருந்து 21 இலங்கை அகதிகளை மன்னாருக்கு படகு மூலம் அழைத்து வந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அநுராதபுரம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அவர், மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபரை விடுதலை செய்த நீதிவான் இவரை மீரிஹன தடுப்பு முகாமில் தடுத்து வைத்து சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# சிறுமியின் படுகொலை; விசாரணை ஆரம்பம்!

(வவுனியா)

மீள்குடியேற்றத் திட்டமான வவுனியா தாளிக்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஆடு மேய்க்கச் சென்றபோது, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 13 வயதுச் சிறுமியின் மரண விசாரணை வவுனியா நீதிமன்றில் பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைதுசெய்யுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி சிறுமி கொலை செய்யப்பட்டமை குறித்து தாம் விசாரணையை மேற்கொண்டதாகவும், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதாகவும் யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன் தெரிவித்தார்.

# ஏதென்ஸ் ஒலிம்பிக் ஜோதி பயணத்தை ஆரம்பித்தது!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி நேற்று முன்தினம் தனது பயணத்தை துவக்கியது. 5 கண்டங்களில் பயணிப்பதற்காக ஒலிம்பிக் ஜோதி நேற்றுமுன்தினம் தனது பயணத்தை துவக்கியது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துவக்க விழா நடைபெற இன்னும் 71 நாட்கள் உ... நிலையில் சிறப்பு விமானம் மூலம் ஒலிம்பிக் ஜோதி நேற்றுமுன்தினம் தனது பயணத்தை துவக்கியது. சிறப்பான விதத்தில் வடிவமைக்கப்பட்ட விளக்கில் ஏற்றப்பட்ட ஒலிம்பிக் ஜோதியானது தொடர்ந்து எரியும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த் ஒலிம்பிக் ஜோதியானது பல்வேறு வண்ணங்களால் வர்ணம் பூசப்பட்டு இருந்த போயிங் - 747 விமானத்தில் தனது பயணத்தை துவக்கியது.

இந்த விமானம் நேற்றுமுன்தினம் இரவு சிட்னியை சென்றடைந்தது. கடந்த 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி சிட்னியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் செல்ல விளையாட்டு உலகில் பிரபலங்களான கார்ல் லூயிஸ், பீலே, எட்டிமெர்க்ஸ், மேஜிக்ஜான்சன், ஏஞ்சலின்ஜோலீ, ஜெனிபர் அனிஸ்டோன் உட்பட பலரை போட்டி அமைப்பாளர்கள் தேர்வுசெய்துள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் 11,000 பேர் ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச்செல்லவுள்ளனர். இந்தப் பயணத்தின்போது ஐந்து கண்டங்களிலும் பயணிக்கும் ஒலிம்பிக் ஜோதி முக்கிய நகரங்கள் வழியாக செல்கிறது. 1896 ஆம் ஆண்டு முதல் ஒல்ம்பிக் போட்டிகள் நடைபெற்ற நகரங்கள் வழியாகவும் ஒலிம்பிக் ஜோதி பயணிக்கிறது.

ஒலிவ் இலைவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஒலிம்பிக் ஜோதியானது உலோகத்தாலும், மரத்தாலும் செய்யப்பட்டுள்ளது.



இதற்கு முன்பு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நகரங்கள் தவிர, பீஜிங், புர்செல்ஸ், கெய்ரோ, கேப்டவுன், ஜெனிவா, இஸ்தான்புல், கீவ், லசான்னே, புதுடெல்கி, நியூயோர்க், நிகோசியா, ரியோடி ஜெனீரோ, சோபியா ஆகிய நகரங்கள் வழியாக ஒலிம்பிக் ஜோதி செல்லவுள்ளது. ஒலிம்பிக் ஜோதியானது ரயில், விமானம், கார்கள் போன்றவைகளில மட்டுமின்றி, யானைகள், ஒட்டகங்கள் மூலமாகவும் எடுத்துச் செல்லப்படவுள்ளது. டெல்கியில் யானை மூலமும், கெய்ரோவில் ஒட்டகங்கள் மூலமும் ஒலிம்பிக் ஜோதி பயணம் செல்லவுள்ளது.

வரும் ஜுன் 6 ஆம் திகதி டோக்கியோவிலும். ஜுன் 13 ஆம் திகதி பிரேசிலிலும் ஒலிம்பிக் ஜோதி பயணம்செல்கிறது. பிரேசிலில் பீலே, ரொனால்டோ ஆகியோர் ஒலிம்பிக் ஜோதியை ஏந்திச் செல்கின்றனர். ஜுன் 16-18 வரை அமெரிக்காவிலும், ஜுன் 21 முதல் பெல்ஜியத்திலும், ஜுன் 26 முதல் ஐரோப்பாவிலும் ஒலிம்பிக் ஜோதி பயணம் செல்கிறது.

# சர்வதேச ஒலிம்பிக் குழுவின் துணைத்தலைவருக்கு சிறை



லஞ்சப் புகார் கூறப்பட்ட சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐ.ஓ.சி) துணைத்தலைவர் கிம்உன் - யாங் கிற்கு இரண்டு ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் நீண்டகாலமாக நீடித்து வந்த கிம்மின் பதவிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு சியோலில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற முக்கிய காரணமாக இருந்தவரும், சர்வதேச விளையாட்டு உலகில் அதிகாரம் மிக்க நிர்வாகிகளில் ஒருவராக இருந்த கிம் தனக்கு விதிக்கப்பட்ட இந்த சிறைத்தண்டனையை எதிர்த்து சியோல் குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டுமுதல் சர்வதேச ஒலிம்பிக் குழு உறுப்பினராக இருந்துவரும் கிம், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழு தலைவர் தேர்தலில் போட்டியிட்டு ஜாக்ஸ்ரோக்கிடம் தோல்வியடைந்தார்.

சர்வதேச தேக்வ்ாண்டோ கூட்டமைப்பு மற்றும் பிற சங்கங்களிடம் இருந்து சுமார் 14 கோடி ரூபாவை பெற்றுக்கொண்டதாக கிம் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் கொண்ட குழு, கிம்மிற்கு இரண்டரை ஆண்டு கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. சிறைத்தண்டனை மட்டுமன்றி சுமார் மூன்றரைக்கோடி ரூபாய் அபராதம் கிம்மிற்கு விதிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கிம்மிற்கு 7 ஆண்டு கால சிறைத்தண்டனையை வழக்கறிஞர்கள் கோரியிருந்தனர்.

ஆனால், தென்கொரியாவின் தேசிய விளையாட்டான தேக்வாண்டோவை சர்வதேச அளவில் பிரபலமடையச் செய்ததில் கிம் பெரும் பங்கு வகித்ததைக் கருத்திற்கொண்டு அவருக்கு தண்டனை குறைக்கப்படதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்ட அந்த 10 நிமிடமும் கிம் அமைதியாக நின்றுகொண்டிருந்தார். ஆனால் இந்த தண்டனையை எதிர்த்து இன்னும் ஒரு வாரத்தில் கிம் வழக்கு தொடர்வார் என்று அவரது தரப்பில் கூறப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிக்கான அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் கிம் விலக்கப்பட்டார்.

# மேற்கிந்திய அணி வீரருக்கு போட்டித்தடை அபராதம்!



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான டினோபெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் சர்வதேச கிரிக்கெட் விதிகளை மீறியதற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான டினோ பெஸ்டுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 75 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

22 வயதான பெஸ்டுக்கு இந்தத் தொடருக்கு போட்டி நடுவராக இருந்துவரும் றொசான் மகானாமா இந்த அபராதத்தை விதித்தார்.

பங்களாதேஷ் அணியின் 2 ஆவது இன்னிங்சின்போது, 19 ஆவது ஓவரில் அந்த அணி வீரரான ராஜீன் சலே ஓட்டம் எடுக்க ஓடும்போது இடையூறாக இருக்கும் வண்ணம் வேண்டுமென்றே ஓட்டம் எடுக்க ஓடும் பாதையில் நின்றதற்காக பெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் நடத்தை ஒழுங்கு விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பெஸ்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# சிம்பாப்வே வீரர் பிளிக்னாட் தஸ்மானிய அணி ஒப்பந்தம்



ஜிம்பாப்வே கிரிக்கெட் அணியில் ஏற்பட்ட இனப பிரச்சினை காரணமாக வெள்ளை இன வீரர்கள் அனைவரும் அணியில் இருந்து விலகினர். 2 ஆம் தர அணியே தற்போது போட்டிகளில் பங்கேற்று தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருகிறது.

இந்த நிலையில், சிம்பாப்வே வேகப்பந்து வீச்சாளர் அன்டி பிளிக்னாட் அவுஸ்ரேலியாவில் உள்ள தஸ்மானியா அணியில் ஆட ஒப்பந்தம் செய்துள்ளார்.

ஓகஸ்ட் மாதம் முதல் அவர் அந்த அணியில் இணைந்து விளையாடவுள்ளார். மற்றொரு சிம்பாப்வே வீரரான இர்வினும் அவுஸ்ரேலிய நாட்டில் உள்ள அணியில் ஆடமுயற்சி மேற்கொண்டுவருகிறார்.

## விளையாட்டு

# தென்னாபிரிக்காவிற்கு எதிராக டெஸ்ட் போட்டிக்குத் திட்டம்!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் டெஸ்ட் போட்டிகளையும் சேர்க்கும் தீவிர முயற்சியில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஈடுபட்டுள்ளது.

இவ்வருட கடைசியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவருகிறது. அப்போது இந்தியா, தென்னாபிரிக்கா இரு அணிகளும் ஏழு ஒருநாள் போட்டிகளில் விளையாட திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலர் எஸ்.கே.நாயர் தெரிவிக்கையில், இரு அணிகளுமே இந்த வருடம் விளையாடவேண்டிய போட்டிகள் அதிக அளவில் உள்ளன. இரு அணிகளுமே இறுக்கமான போட்டி அட்டவணைகளுடன் உள்ளன. இருப்பினும் தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் டெஸ்ட், ஒருநாள் போட்டிகள் இரண்டையும் நடத்துவது நல்லது. இந்தத்தொடரில் டெஸ்ட் ஒருநாள் போட்டிகள் இரண்டடையும் நடத்த தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபைக்கு எழுதியுள்ளோம். தற்போது அவர்களுடைய பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று கூறினார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை இரண்டுகட்டமாக நடத்தும் இந்தியாவின் ஆலோசனையை, தென்னாபிரிக்கா நிராகரித்துவிட்டதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்தன. இந்தச் செய்திக்கு பதிலளித்த போதே நாயர் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

இரண்டு கட்டமாக நடத்த இந்தியா வழங்கிய ஆலோசனையில் முதற்கட்டமாக ஒருநாள் தொடரையும், அதன்பிறகு மற்றொரு திகதியில் டெஸ்ட் தொடரை நடத்த கூறப்பட்டிருந்தது.

இது குறித்து நாயர் மேலும் கூறுகையில்- இரு அணிகளுக்கும் இடையேயான தொடர் குறித்து இதுவரை ஏதும் முடிவாகவில்லை. தென்னாபிரிக்காவின் பதிலுக்காக காத்திருக்கிறோம். அதன் பின்னரே கிரிக்கெட் சபை பயண மற்றும் அட்டவணைக்குழு கூடி இந்த சீசனுக்கான அட்டவணை பற்றி முடிவு செய்யும். இம்மாத இறுதியில் அட்டவணை பற்றி முடிவுகள் வெளியிடப்படும்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை ஒக்டோபரில் நடத்த திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் அவுஸ்ரேலிய அணி இந்தியா வரவுள்ளது. டிசம்பரிலும் நடத்த திட்டமிட முடியாது. ஏனெனில் இங்கிலாந்து அணி வரும் டிசம்பரில் தென்னாபிரிக்கா செல்கிறது. எனவே தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரை நவம்பரில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

நவம்பர் 4 அல்லது 5 ஆம் திகதிக்குப் பின்னரே அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரை துவக்க முடியும். ஆனால், டிசம்பர் முதல்வாரம்வரை அவர்கள் இந்தியாவில் இருக்கமுடியாது. இதுதான் தற்போது இருக்கும் முக்கிய பிரச்சினை என்றும் நாயர் கூறினார்.

# குழந்தை பிறந்தது தெரிந்தவுடன் மைதானத்தைவிட்டு வெளியேறுவேன்

## இங்கிலாந்து அணித்தலைவர் கூறுகிறார்

நியூஸிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியின்போது, தனக்கு குழந்தை பிறந்த விடயம் தெரியவந்ததும் மைதானத்தைவிட்டு வெளியேறுவேன் என்று இங்கிலாந்து அணியின் கப்டன் மைக்கல் வொகன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி, லீட்சில் நேற்றுமுன்தினம் துவங்கியது. இந்த டெஸ்ட் போட்டியின்போது இங்கிலாந்து அணியின் கப்டனான மைக்கல் வோகனுக்கு முதல் குழந்தை பிறக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குழந்தை பிறந்த செய்தி வந்தவுடன் மைதானத்தைவிட்டு உடனடியாக வெளியேறுவேன் என்று வோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த மைக்கல் வோகன் கூறுகையில், 2 ஆவது டெஸ்ட் போட்டியின்போது குழந்தை பிறப்பதற்கான வாய்ப்புள்ளது. குழந்தை பிறந்த செய்தி வந்ததும் மைதானத்தைவிட்டு வெளியேறுவேன் என்று கூறினார். ஆனால் தான் துடுப்பொடுத்தாடிக் கொணடிருக்கும்போது, குழந்தை பிறந்த செய்திவந்தால் அதை ஒதுக்கி வைத்துவிடும் நிலையில் வோகன் இருக்கிறார்.

நான் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது, குழந்தை பிறந்த செய்தி வந்தால், அது என்னுடைய அதிஷ்டமின்மையைக் குறிக்கும் என்றும் வொகன் கூறினார். தன்னுடைய மனைவி அனுமதிக்கப்பட்டு இருக்கும் மருத்துவமனை மைதானத்திற்கு அருகில் இருப்பது நல்ல விஷயம் என்றும் காலை 11 மணிக்கு முன்பு குழந்தை பிறந்தால் நன்றாக இருக்கும் என்றும் வோகன் கூறினார்.

அப்படி வோகன் மைதானத்தைவிட்டு வெளியேறினால் அவருக்குப் பதிலாக மாற்று வீரரை களம் இறக்க தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளதாக நியூஸிலாந்து அணி மேலாளர் லிண்ட்ஸே கிரோக்கர் தெரிவித்துள்ளார்.

ஆனால், துடுப்பாடக்களம் இறங்கும் விடயத்தில் விதிகளைப் பின்பற்றவேண்டும் என்று நியூஸிலாந்து கூறியுள்ளது. மைதானத்தைவிடடு ஒரு வீரர் அதிகநேரம் வெளியே இருந்தால் அவர் 5 விக்கெட் வீழ்ந்த பின்னரே களம் இறங்கவேண்டும் என்பது விதியாகும்.

# உலக தகுதி கால்பந்து ரொனால்டோ ஹட்ரிக் சாதனை



உலககோப்பை காற்பந்து தகுதிச் சுற்றாட்டம் பிரேசிலில் நடந்தது. இதன் ஒரு ஆட்டத்தில் பிரேசில் - ஆர்ஜென்டீனா அணிகள் மோதின.

இதில் பிரேசில் அணி 3-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜன்டீனாவை வீழ்த்தியது. பிரபல வீரர் டொனால்டோ தெடர்ந்து 3 கோல்கள் அடித்து, ஹட்ரிக் சாதனை படைத்தார்.

# சார்ள்ஸ் டிக்கன்ஸ்



சார்ள்ஸ் ஜோன் ஹவம் டிக்கன்ஸ் 1812 பெப்ரவரி 07 இல் போர்ட்ஸ்மவுத் என்ற சிறு நகரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் ஜோன் டிக் கன்ஸ். இவர் இங்கிலாந்துக் கடற்படையில் எழுதுவினைஞராக வேலை செய்தார்.

சார்ள்ஸ் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை டிக்கன்ஸ். இவருக்கு 8 சகோதரர்கள் இருந்தனர். இவர்களது குடும்பம் அவ்வளவு தனவந்தக் குடும்பம் அல்ல. சில காலம் சென்ற பின் தந்தையின் வேலை காரணமாக டிக்கன்ஸ் குடும்பம் வடகென்ட் மாநிலத்திலுள்ள சத்தாம் நகரத்தில் குடியேறியது.

அங்கு சில காலம் வாழ்ந்த அவர்களது குடும்பம் வறுமையினால் பீடிக்கப்பட்டது. சிறுவன் டிக்கன்ஸ் அதிஷ்டவசமாக வேல்ஸ் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தான். ஆனால், குடும்பத்தின் வறுமை காரணமாக டிக்கன்ஸ் பாடசாலையை விட்டு விலக நேரிட்டது. அவருக்கு அப்போது வயது 15. சார்ள்ஸ்க்கு அவரது அம்மா புத்தகங்களை வாசிக்கவும், அதனைப்பற்றிய அறிவைப் பெறவும் உதவினார். அவனுக்கு 16 வயது இருக்கும்போது, ஒரு சப்பாத்து தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. இந்தக் காலப் பகுதியில் அவரது தந்தை பெற்ற கடனைத்திருப்பிக் கொடுக்காததால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

வருடங்கள் - நாட்கள் போல் கடந்தன. சார்ள்ஸ் டிக்கன்ஸ் தனது அறிவை மேம்படுத்த வாரப் பத்திரிகைகளுக்குச் சிறுகதைகள், கதைகள், நாடகப் பிரதிகளை அனுப்பினார். இது அவருக்கு வெற்றியாக அமைந்தது. 1836 ஆம் வருடத்தில் சார்ள்ஸ்க்கு 24 வயது இருக்கும்போது, கெதரீன் ஹொகர் என்பவரை மணமுடித்தார். சார்ள்ஸின் திருமண வாழ்க்கை அவருக்கு சந்தோஷத்தை தரவில்லை. அவர்கள் இருவருக்கும் 10 குழந்தைகள் பிறந்தனர். 1858 ஆம் ஆண்டில் அவர்கள் இருவரும் பிரிந்தனர். இவர் எழுதிய ஓல் த இயர் அரவுண்ட் (All the year around 1859-88) புத்தகம் 300,000 பிரதிகளுக்கு மேலாக விற்பனை ஆகியது. நல்ல வருமானத்தையும் பெற்றுக் கொடுத்தது. பல புத்தகங்களை எழுதினார். அவரது கடைசிக்காலத்தில் எட்வின் ரோட் என்ற புத்தகத்தை எழுதினார். ஜூன் 9 ஆம் திகதி 1870 ஆம் ஆண்டில் இறந்தார். அவர் வெஸ் மினிஸ்ரர் அபேயி (West minister Abbey) இல் அடக்கம் செய்தார்கள்.

### இவர் எழுதிய ஏனைய நூல்கள்

| | | |
|---|---|---|
| Great Expectations | (1860-61) | பாரீ, பாரீரேகிரேட் எக்ஸ்பெக்டேசன் |
| Bleak House | (1852-53) | பிள்க் ஹவுஸ் |
| Little Dorrit | (1855-57) | லிட்டில் டொறிட் |
| Tale of Two Cities | (1859) | ரேல் ஒப் ரு சிட்ரீஸ் |
| Hard Times | (1854) | ஹாட் டைம்ஸ் |
| History of England | (1851-53) | ஹிஸ்டரி ஒப் இங்கிலன்ட் |
| Dombey and Son | (1846-48) | டொம்பே அன் சன் |
| David Copperfield | (1849-50) | டேவிட் கொப்பர்பீல்ட் |

### இவரது நத்தார் கதைகளும் பிரசித்தி பெற்றன

| | | |
|---|---|---|
| Christmas Carols | (1843) | கிறிஸ்மஸ் கரோல்ஸ் |
| The Chimes | (1845 for 1844) | த சைம்ஸ் |
| The Battle of Life | (1846) | பெட்ல் ஒப் லைவ் |
| The Hundred Man | (1848) | த ஹன்றட் மேன் |

# மாம்பழம்

மாம்பழம் நல்ல மாம்பழம் – அப்பா
வாங்கித் தந்த மாம்பழம்
மாம்பழம் இது காணக்கான
வாயினிக்கிற மாம்பழம்

மாம்பழம் இவை கிடைத்த படியால்
மகிழ்வினோடு வருகிறேன்
தீம்பழ மிதைச் சீவிச்சீவிச்
சீரித்துச் சீரித்துத் தின்னுவோம்.

தின்னுவோம் வா தின்னுவோம் வா
சீவிச் சீவித் தின்னுவோம் வா
பொன்னுருண்டை போல நல்ல
புதுமையான மாம்பழம்.

கவிஞர். த. துரைசிங்கம்.

# மூளைக்கு வேலை



மூன்று குச்சிகளை மட்டும் மாற்றி அமைத்து இங்குள்ள மீன் எதிர் திசையில் நீந்துவது போல மாற்றி அமைக்க வேண்டும். எங்கே முயற்சியுங்கள் பார்க்கலாம்?

(விடை அடுத்த வாரம்)

## சென்றவார விடைகள் மூளைக்கு வேலை

| | | |
|---|---|---|
| 15 | 20 | 13 |
| 14 | 16 | 18 |
| 19 | 12 | 17 |

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங் கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாண வர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங் களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப் பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத் தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................

............... ............... ...............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

--- இங்கே மடிக்கவும் ---





# சிவப்புக் கொண்டைச் சேவல்

முன் ஒரு காலத்தில் அண்ணனும், தம்பியுமாக இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுடைய தாயார், தகப்பனார் இறந்து போனார்கள். குழந்தைகளுக்கு அவர்கள் வைத்துச் சென்ற செல்வம், சிவப்புக் கொண்டை உள்ள ஒரு சேவல் மட்டும் தான்.

வீட்டில் இருந்த உணவுப் பண்டங்கள் ஒரு நாள் அறவே தீர்ந்து போய்விட்டன.

'களஞ்சியத்துக்குப்போய் ஏதாவது இருக்கிறதா என்று பாரேன். ஒரேபசியாய் இருக்கிறது!' என்று அண்ணன் தங்கையிடம் சொன்னான்.



தங்கை களஞ்சிய அறைக்குப் போனாள். அது காலியாக இருந்தது. தும் புத்தடியை எடுத்துப் பெருக்கினாள். அதில் ஒரே ஒரு தானிய மணி கிடைத்தது.

தானிய மணியை அண்ணனிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அதை விதைப்பது என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

புறக்கடையில் பள்ளம் தோண்டி, விதையை ஊன்றி, மண்ணைப் போட்டு மூடினார்கள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், விதை முளைத்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக அண்ணன் புறக்கடைக்குப் போனான். அங்கே விதை முளைத்து வானளாவ வளர்ந்திருந்தது. அதன் தண்டு தேவதாரு மரம் அளவு பருமனாய் இருந்தது. முடியோ, கண்ணுக்கே தெரியவில்லை!

'என்ன அற்புதம்! இதன் உச்சியில் என்ன தான் இருக்கிறது என்று பார்போமே!' இப்படி நினைத்து கிளையில் தொற்றி ஏறினான் பையன்.

ஏறிக் கொண்டே போனவன் மேக மண்டலத்தை அடைந்து விட்டான். மரமோ, மேகங்களை ஊடுருவி, இன்னும் மேலே போயிருந்தது.

சிறுவன் மேகங்கள் மேல் நடந்து போனான்.

நடந்து கொண்டே போனவன், ஒரு சிறு வீட்டைக் கண்டான். அதன் கதவைத் திறந்து முன் அறைக்குள் புகுந்தான். அறையின் மூலையில் உட்கார்ந்திருந்தாள் ஒரு கிழவி. அவளைப் பார்க்கவே பயமாய் இருந்தது. அவளுக்கு இருந்தது ஒரே கண். அதுவும் துருத்தி இருந்தது. கழுகுக் கண் போலப் பளிச்சிட்டது. கிழவி உட்கார்ந்து திரிகையில் தைியோ அரைத்துக் கொண்டிருந்தாள்.

கிழவி திரிகையின் பிடியைச் சுழற்றினாள். அதிலிருந்து வகை வகையான பண்டங்கள் விழுந்து குவிந்தன!

கிழவியைப் பார்க்கவே பயமாய் இருந்தது. குலை நடுங்கிற்று ஆனால், திரிகையிலிருந்து விதம் விதமான பண்டங்கள் விழுவதைப் பார்க்கவே, ஒரேசிரிப்பாய் வந்தது. அடுப்பண்டையில் ஒரு மூட்டை இருந்தது. பல வகையான பண்டங்கள் அதில் நிறைந்திருந்தன.





# சிறுவர் அரங்கம்

பையன் பசித்திருந்தான் என்றாலும், அவன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. சட்டென்று மூட்டையை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு எடுத்தான் ஓட்டம். கிளைகள் வழியே இறங்கித் தரை சேர்ந்தான்.



"என்ன கொண்டு வந்திருக்கின்றேன் பார்! என்று தங்கையிடம் சொன்னான். அண்ணனும், தங்கையும் பல நாட்கள் அந்தப் பண்டங்களைத் தின்று பசியாறி வந்தார்கள். கடைசியில் ஒரு நாள் சாக்கில் கைவிட்டுத் துழாவினார்கள் அது காலியாக இருந்தது. தின்பதற்கு ஒன்றும் இல்லை. ஆகவே மறுபடி ஆகாயத்துக்கு ஏறிச் செல்வது என்று சிறுவன் முடிவு செய்தான்.

"என்னையும் அழைத்துக் கொண்டுபோ. அண்ணா!' என்றாள் தங்கை.

"மாட்டேன். உன்னால் தாங்க முடியாது. கிழவியைக் கண்டு அரண்டு விடுவாய், இல்லாவிட்டால் திரிகையைப் பார்த்து மகிழ்ச்சி தாங்காமல் வாய்விட்டுச் சிரித்து விடுவாய். கிழவி உடனே நம்மைக் கண்டு கொள்வாள்" என்றான் அண்ணன்.

"சிரிக்க மாட்டேன் பயப்படவும் மாட்டேன்! என்னைக் கூட்டிக் கொண்டு போ, அண்ணா! என்று கெஞ்சினாள் தங்கை.

அண்ணன் தங்கையையும் அழைத்துக் கொண்டு போனான். இரண்டு பேரும் மரத்தின் மேல் ஏறி ஆகாயத்துக்குப் போனார்கள். மேகத்தை அடைந்தார்கள். அதிலே வழி தேடிக்கொண்டு நடந்தார்கள்.

இப்படி நடந்து, வீடு இருந்த இடத்தை அடைந்தார்கள். வீட்டுக்குள் போனார்கள், அங்கே ஒரு மூலையில் கிழவி உட்கார்ந்திருக்கக் கண்டார்கள். தொண்டு கிழவி, பயங்கரமாய் இருந்தாள் திரிகையில் எதையோ அரைத்துக் கொண்டிருந்தாள்.

"ஐயோ, பயமாய் இருக்கிறதே! என்று கிசுகிசுத்தாள் தங்கை அண்ணன் அவள் விலாவில் இடித்தான் 'பேசாதிரு, கிழவி காதில் பட்டுவிட்டால் ஆபத்து' என்று எச்சரித்தான். கிழவியோ திரிகையைச் சுழற்றிக் கொண்டிருந்தாள். என்ன அற்புதம்! திரிகையிலிருந்து விதம் விதமான பண்டங்கள் விழுந்து கொண்டிருந்தன. எங்குமே காணமுடியாத வேடிக்கையான அபூர்வம்! நேரே திரிகையிலிருந்து மள மளவென்று வெளியே வந்த வண்ணமாய் இருந்தன பலகாரங்கள்!

இந்த அதிசயத்தைக் கண்டதும் தங்கையால் தாங்க முடியவில்லை. அவள் பக்கென்று சிரித்துவிட்டாள்.

'இ-ஹி-ஹி!'

(தொடரும்...)

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- உ.லவன்குமார்
கற்கும் பாடசாலை :-
வல்வை சிவகுரு வித்தியாலயம்
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைகள் வாசித்தல்,
விளையாட்டு, கல்வித்துறை.



முழுப்பெயர் :- க.பிறேமிளாதேவி
கற்கும் பாடசாலை :-
ஸ்கந்தவரோதயா கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ர.கபில்சீலன்
கற்கும் பாடசாலை :-
தமிழ்கலவன் பாடசாலை
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- க.எழில்அரசி
கற்கும் பாடசாலை :-
பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
கல்வித்துறை.

முழுப்பெயர் :- அ.டினேஸ் ஆனந்
கற்கும் பாடசாலை :-
யாழ்.மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :
பத்திரிகை வாசித்தல்,
விளையாட்டு.

முழுப்பெயர் :- ந.மேரி றம்சியா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல்,
பத்திரிகை வாசித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :...........................................
கற்கும் பாடசாலை :...........................................
கற்கும் தரம் :...........................................
வீட்டு முகவரி :...........................................
பிறந்த திகதி :...........................................
ஆர்வமுள்ள துறைகள் :...........................................
:...........................................

............................ திகதி ............................ ஒப்பம்

............................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............................ பெற்றோர் ஒப்பம்

## நேரம் ஒதுக்குங்கள்

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது இதயத்தின் இசை
சிந்தப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது சக்தியின் பிறபபிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் - அது இளமையின் இரகசியம
படிக்க நேரம் ஒதுக்குங்கள் - அது அறிவின் ஊற்று
நட்புக்காக நேரம் ஒதுக்குங்கள் - அது மகிழ்ச்சியின் வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் - அது வெற்றியின் விலை

யோ.மிதுலா - தரம் 10, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

இங்கே மடிக்கவும்



## அன்புள்ள சிறுவர்களே!



ஒரு செய்தியை அல்லது எண்ணத்தை ஒருவர் இன்னொருவருக்கு எழுத்துமூலம் தெரிவிப்பதே கடிதம். இதன்மூலம் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது.

சிறுவர்களே, உங்களுக்காக விலாசமிடப்பட்ட கடிதங்கள் இவை.

நீங்கள் கற்றுக்கொள்வதற்கு அறிந்து கொள்வதற்கு - அதன்மூலம் உங்களை வளமாக்க இந்தக் கடிதங்கள் துணைபுரியும் என நம்புகிறேன். ஆனால், உங்களுக்குத் தெரியும். குளம் வரையும் ஒரு குதிரையைக் கொண்டு செல்லலாம்.

ஆனால், நீரைப் பருக வைக்கமுடியாது. குதிரைதானே விரும்பி நீரைப் பருகினால் தான் முடியும். அதனால், உங்களுடைய மனக்கதவுகளைத் திறந்து இந்தக் கருத்துக்களை உள்வாங்கி நடைமுறைப்படுத்தினால் மட்டுமே பயன்பெற முடியும். சரி, அப்படி என்ன எழுதப் போகிறேன் என்று நினைக்கிறீர்கள்? எவ்வாறு சிறப்பாகக் கற்பது. சுலபமாக பரீட்சைக்கு முகங்கொடுப்பது வரும் வாரங்களில் இதனைப் பற்றிப்பார்ப்போம்.

பாசமுடன் - சாரு அக்கா

## எனது செல்லப்பிராணி



எனது செல்லப்பிராணி கிளி ஆகும்.
எனது செல்லப்பிராணியின் பெயர் மஞ்சு.
மஞ்சு மிக அழகானது.
என் மஞ்சுவை நான் பொந்தில் பிடித்தேன்.
சிறு கனிவகைகளை மிக விரும்பி உண்ணும்.
அதிலும் கொவ்வைப் பழத்தில் மிகமிக விருப்பம்.
மஞ்சு என்னுடன் சேர்ந்து கதைக்கும்.
எனது செல்லப்பிராணியில் எனக்கு மிக விருப்பம்.

தி.ஜெனத்குமரன் தரம் - 6 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

## கிளிகள் மட்டும் ஏன் பேசுகிறது?



சிறுவர்களுக்குப் பிடித்த பறவைகள் வரிசையில் கிளியும் ஒன்று. நாம் சொல்வதை அடுத்த நிமிடமே கிளிகள் திரும்பச் சொல்லும். வீட்டுக்குள் வரும்போது பெயர் சொல்லி அவை மழலைக் குரலில் அழைப்பது சிறுவர்கள், குழந்தைகளைப் பரவசப்படுத்தும் விடயம்.

காகம், கொக்கு என்று எத்தனையோ பறவைகள் இருக்கும்போது கிளிகளுக்கு மட்டும் இந்தப் பேசும் சக்தி எப்படி வந்தது?

அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மனிதர்களுக்கு இருப்பது போல் ஒரு ஜோடி ஒலி உறுப்புக்களும், குரல்வளையும் பறவைகளுக்கு உண்டு. ஆனால், கிளிகளின் நாக்கு மனிதர்களைப் போலவே பெரிய தடித்த நாக்குகள். இந்த நாக்குகள் கிளிகளுக்கு பேசும் சக்தியை கொடுக்கின்றது. மனிதனைப் போல் ஒரே சீரான வாக்கிய அமைப்புக்களில் பேச கிளியால் முடியாது. ஏற்ற, இறக்கம் இல்லாமல் ஒரே நிலையான ஒலி வடிவிலேயே கிளியின் பேச்சு அமைந்திருக்கும்.

இரண்டாவது காரணம், கிளிகளின் மொழிக்கும், மனிதர்களின் மொழிக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள். தாங்கள் எழுப்பும் சத்தத்தைப் போலவே மனிதர்களின் பேச்சும் இருப்பதால், அவை அவற்றை அப்படியே திரும்பச் சொல்கின்றன. ஆனால் அந்தப் பேச்சுக்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கிளிகளுக்கு தெரியாது. ஆனால், தன்னுடைய பாணியில் பேசுவதுதான் அதனிடமுள்ள சிறப்பு.

பேசும் சக்தியைத் தவிர, வேறு சில சக்திகளும் கிளிகளுக்கு உண்டு. உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அந்த ஊர் சீதோஷ்ண சக்திக்கு ஏற்றவாறு, தனது உடலைக் கிளிகளால் பக்குவப்படுத்த முடியும். தேவைப் பட்டால் குரங்குகளைப்போல கால்களைப் பரத்தி கிளைக்குக் கிளை தாவவும் கிளிகளுக்குத் தெரியும். ☆

## விடுகதையும் விடைகளும்

1) படிக்காத ராணி என்ன ராணி?
2) உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய் தீர்ப்பு வழங்குவார் அது என்ன?
3) கடல் நீர் அருந்தும் பறவை எது?
4) கண்ணீர் விட்டே கடைசிவரை ஒளி தருவான் அவன் யார்?
5) படிக்காத மாஸ்ரர் என்ன மாஸ்ரர்?



### விடைகள்

1. சாம்பிராணி
2. தராசு
3. பெங்குயின்
4. மெழுகுவர்த்தி
5. போஸ்ட் மாஸ்ரர்

சி.நிரோஜன்
யாழ்ப்பாணக் கல்லூரி

## உங்கள் கைவண்ணம்



தரம - / மசன மஜான்ஸ் கல்லூரி.




ப.கஜேந்தினி
தரம் - 9
ளான் தெற்கு
விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

## My Friends

The Welcome Song
This is Roy
I Wel come You
I am Very Glad to meet you
I have one Word to
Say to You
Come Shake hands
How do You Do?



*L.Sharmini (5 A)*
*Rajmakal*
*Karaveddi Centre*
*Karaveddi.*

# ஊடகவியலாளர் நடேசனின் குடும்பத்திற்கு புலம்பெயர்ந்த மக்கள் நிதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டுப் பற்றாளர், மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசனின் பணியாற்றுகையை மதித்து அவரது குடும்பத்தினருக்கு புலம்பெயர்ந்த மக்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளனர்.

கனேடிய தமிழ் வானொலி (**C.T.R.**) இன் நேயர்கள் வட்டத்தினர் எமது தேசத்தின் உண்மைகளை வெளிப்படுத்திய ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டதால் துயருறும் அவரின் நான்கு பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் நன்கொடையாக அனுப்பிவைத்த பணத்தை ஐ.பி.சி.யின் வவுனியா செய்தியாளர் கனகரவி, நடேசனின் மனைவியிடம் நேற்று முன்தினம் நெல்லியடியில் அவரது இறுதி இரங்கலுரைகள் நடைபெற்றபோது கையளித்தார். (03)



கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் இயற்றி 'இணுவில் கந்தன் பிள்ளைத்தமிழ்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனிடமிருந்து பிரபல எழுத்தாளரும், நீர்கொழும்பு விஜயரட்ணம் வித்தியாலய அதிபருமாகிய ந.கணேசலிங்கம் சிறப்புப் பிரதியை பெறுகிறார். அருகில் சீர் இணுவை திருவூர் நூலாசிரியர் மூ.சிவலிங்கமும் காணப்படுகிறார். (101)

# ஏ-9 வீதியில் வசிக்கும் குடும்பங்களின் விபரங்கள் படையினரால் சேகரிப்பு!

ஏ-9 வீதியின் இடதுபுறமாக 50 மீற்றர் வரையான பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

ஏ-9 வீதியின் புகையிரதப் பாதைப் பக்கம் தவிர்ந்த மற்றைய பக்கத்தில் வீதியில் இருந்து 50 மீற்றருக்குள் வசிக்கின்ற குடும்பங்களின் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு, தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர்களையும் படைத்தரப்பினர் கோரியுள்ளனர்.

கடந்த வார இறுதிப் பகுதி முதல் படையினர், இப்பகுதிகளில் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (25)

# முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகரின் அலுவலக கட்டிடம் இன்று காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வன்னிப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் என். ஜெயரட்ணம், முல்லை மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவுனியா, முல்லைத்தீவு அஞ்சல் அத்தியட்சகர் வீ.குமரகுரு தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (03)

# "பஞ்சவர்ண நரியார்" நாடகம் நாளை மேடையேற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு 'பஞ்சவர்ண நரியார்' என்ற சிறுவர் அரங்கிற்கான நாடகம் நாடக ஆர்வலர்களுக்காகவும், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்காகவும் நாவலர் கலாசார மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

ஆரம்பப் பாடசாலை சிறுவர்களுக்காக தயாரிக்கப்பட்ட இந்நாடகம் வடமராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் மேடையேற்றப் பட்டு வருகிறது. குழந்தை ம.சண்முகலிங் கத்தால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்ட இந்த நாடகத்தை செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்து மேடையேற்றி வரு கிறது.

எதிர்வரும் கிழமைகளில் பஞ்சவர்ண நரியார் நாடகம் பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., அராலி ம.வி., அராலி இந்துக் கல்லூரி, வட்டு. மத்திய கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைகளில் மேடையேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

# ஆண்டு நிறைவு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தும்பளை தெற்கு தமிழொலி மாணவ மன்றத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழா வும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் திருவள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் ப.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கமும், எஸ். கஜேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் விசேட நிகழ்வாக அம்பிகைதாசன், ம.பகீரதன் குழுவினரின் "பார்வதி கல்யாணம்" எனும் வில்லிசையும், தும்பளை தெற்கு இளைஞர் யுவதிகளின் "இதய கீதம்" நிகழ்வும், கவியரசு பா.வேதநாயகத்தின் நெறியாள்கையில் உருவான "வார்த்தைக்குப் பின்னால்" எனும் சமூக சீர்திருத்த நாடகமும் நடைபெறவுள்ளது. (12)

# குடாநாட்டு புனரமைப்பு குறித்து காவோட் பிரதிநிதி ஆராய்வு

(கொழும்பு)

லண்டன் "காவோட்" அமைப்பினைச் சேர்ந்த தென்னாசியப் பிராந்தியத்துக்கான அபிவிருத்திப் பிரதிநிதி மேரி லூக்காஸ் நேற்று முன்தினம் குடாநாட்டுக்கு விஜயம் செய்தார்.

கடந்த கால யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவர் இங்கு வருகை தந்தார்.

குடாநாட்டுக்கான விஜயத்தை மேற்கண்ட இவர், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ். மறை மாவட்ட ஆயர், தோமஸ் சௌந்தரநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அறிவொளி முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு

(சுதுமலை)

வண்ணை ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளியில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கே கடந்த 1 ஆம் திகதி முதல் போஷாக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. பெற்றோரின் ஒத்துழைப்புடன் இடம்பெறும் இந்தச் செயற்பாட்டை முன்பள்ளி நிர்வாகத்துடன் சனசமூக நிலையத்தினர் மேற்கொண்டுவருகின்றனர். (91)

## நெடுந்தீவு கிழக்கு அந்தோனியார் ஆலய திருநாள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் நேற்று ஆரம்பமாகியது. இது தொடர்ந்து எதிர்வரும் 13 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

12 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடும், மறுநாள் 13 ஆம் திகதி காலை இறுதி நாள் திருப்பலியும், கொடியிறக்கமும், திருச்சொருப பவனியும் இடம்பெறவுள்ளது.

இந்த அந்தோனியார் ஆலயத் திருநாளுக்கு நெடுந்தீவில் உள்ள மக்கள் அனைவரும் மதவேறுபாடின்றி வருடாவருடம் கலந்து அருள்பெறுகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

## பொது நிர்வாக கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ். பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11.06.2004 அன்று பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் தபாலில் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் பீடாதிபதி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## பட்டச் சான்றிதழை பெற்றுகொள்ளலாம்

கடந்த பங்குனி மாதம் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம்பெற்ற பட்டப்பின் கற்கைநெறி மாணவர்கள், பட்டமளிப்பு அங்கியை மீள ஒப்படைத்ததற்கான பற்றுச்சீட்டு மற்றும் மாணவர் அடையாள அட்டையை பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் ஒப்படைத்து அவர்களுக்குரிய பட்டச் சான்றிதழ்களை எதிர்வரும் 7 ஆம் திகதி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## திரைப்படக் காட்சி

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டம் வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் பிரபாத் ராய் நெறியாள்கையில் உருவான "லத்தி" என்னும் வங்க மொழித் திரைப்படம், ஆங்கிலத் துணைத் தலைப்புக் களுடன் வீடியோக் காட்சியாக இன்று சனிக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்ட நாதன் ஆகியோரின் நெறிப்படுத்துதலின் கீழ் காண்பிதத படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும.

## கண்ணகை அம்மன் பொங்கல் விழா

தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றுபகல் அடியார்கள் தங்கள் நேர்த்திக்கடனைச் செய்வார்கள், பருத்தித்துறை, புலோலி, மாலிசந்தி ஆகிய பகுதிகளிலிருந்தும் காவடிகள், தூக்குக்காவடிகள், கரகங்கள் என்பன ஆலயத்திற்கு வந்து சேரும் அதனை தொடர்ந்து சிலம்படி வித்தைகள் நடைபெறும். (17)

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன அனைத்துக் கற்கை நெறிகளினதும் பகல், மாலை நேர மாணவர்களின் 1ஆம் 2ஆம் அரையாண்டு பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. 1ஆம் 2ஆம் 3ஆம் 4ஆம் வருடமாணவர்களின் சகல பெறுபேறுகளும் வெளியாகியுள்ளது. இதனை அலுவலக நேரத்தில், விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் என நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார். (25)

## கப்டன் வாமக்காந்தின் நினைவஞ்சலி நிகழ்வு

கப்டன் வாமக்காந்தின் நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாலயத்தில் இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறும்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.ஹரிணி
முகவரி : திருநெல்வேலி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------------------
முகவரி :----------------------
பிறந்த ஆண்டு :----------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------------------
பெற்றோர் ஒப்பம்

வாரநோக்கு

யாழவன்



# முன்னர் நிமலராஜன் இப்போது நடேசன் வரலாறு தொடரப் போகின்றதா....?

கடந்த வாரம் மனிதாபிமான, ஜனநாயக உணர்வு மிக்க பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவமொன்று நடந்தேறியுள்ளது. மூத்த ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான நடேசன் பட்டப்பகலில், பலத்த இராணுவ காவல்மிக்க மட்டக்களப்பு நகர்ப் பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவமே அதுவாகும்.

சந்திரிகா தலைமையிலான அரசின் காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது படு பயங்கரமான, மிலேச்சத்தனமான, அரசியல் நாகரிகமற்ற அராஜகச் செயலே நடேசனின் கொலையாகும். ரணில் தலைமையிலான அரசு கடந்த முறை பதவியேற்பதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆதரவுடன் தமிழ் உணர்வும், பற்றுமற்ற தேசவிரோத சக்திகளினால் ஊடகவியலாளர் நிமலராஜன் அவரது வடடில் வைத்து ஊரடங்கு வேளையிலே கொடூரமான முறையிலே படு கொலை செய்யப்பட்டிருந்தார்.

நிமலராஜன் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகளின் முதற்கட்ட தர்க்க முறையற்ற விசாரணைகளே பூர்த்தி செய்யப்படாத நிலையிலே நடேசனின் படுகொலை நடைபெற்றுள்ளது. இது இலங்கை அரசின் "ஜனநாயகத்தின்" அளவையும் அது தமிழ் ஊடகவியலாளர்கள் மீது காட்டும் "அக்கறையையும்" தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

> **பத்திரிகையாளர் நிமலராஜ னின் கொலை சூத்திரதாரிகள் சட் டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக் கப்பட்டிருந்தால், இன்று நடைபெற்ற நடேசனின் கொலை தவிர்க்கப்பட்டிருக்கலாம். இப்போது நடேசனின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கென விசேட விசாரணைக் குழுவை அரசு அமைத்துள்ளது. இதுவும் இது வரை வந்து போன வழமையான விசாரணைக் குழுக்கள் போன்றே வெறும் கண் துடைப்புக்கான குழுவாக அமையும் என்பதை எதுவித தயக்கமுமின்றி முன்னரே கூற முடியும்**

இலஙகையின் சட்ட வரைமுறைகளின்படி ஒரு படுகொலை தொடர்பான விசாரணைகளின் சுருக்க முறையற்ற விசாரணைகள் ஒரு வருட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு, மாவட்ட நீதிமன்றங்களில் நடைபெற்று வரும் அக்குறித்த விசாரணை மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட வேண்டும். ஆனால், அந்த சட்ட நடைமுறை நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளின் போது, கடைப்பிடிக்கப்படவில்லை. இதற்கு தனிப்பட்ட அரசியற் செல்வாக்குகளும் காரணமாக அமைந்தன.

ஏறக்குறைய நிமலராஜனின் கொலை நடந்து நான்கு வருடங்கள் நிறைவு பெறப்போகும் இன்றைய நிலையிலும் நிமலராஜனின் கொலை தொடர்பான வழக்கு யாழ். நீதிவான் நீதி மன்றினாலேயே மந்தகதியிலே மேற்கொளளப்பட்டு வருகிறது. சந்தேக நபர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட முக்கியமான நபர்கள் எவரும் இது வரை நீதிமன்றிலே ஆஜர்படுத்தப்படவில்லை.

இதை விடுத்து 'எய்தவன் இருக்க அம்பை நோவது போல' நிமலராஜனின் கொலையுடன் அதிக சம்மந்தப்படாத பலர் குற்றவாளிகளாக நீதிமன்றிலே நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களை அடைத்து வைத்துள்ள யாழ். சிறைச்சாலை அத்தியகட்சகருக்கு அடிக்கடி அநாமதேய தொலைபேசி மிரட்டல்கள் வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலே இலங்கையின் நீதித்துறை நகரும் போது, திட்டமிட்ட படுகொலைகள் என்பது தவிர்க்கமுடியாத, தடுக்க முடியாத விடயமாக மாறி வருகினறது.

பத்திரிகையாளர்கள் கொலை தொடர்பான விசாரணைகளை இலஙகையின் நீதிமன்றங்கள் கையாளும் விதம், கொலைச சூத்திரதாரிகள் எது வித விசாரணைகளுமின்றி உயர்பதவிகளை அலங்கரிப்பது மேலும் கொலைகளில் ஈடுபடும் கொலைகாரர்களை ஊக்குவிக்கும் சக்தியாக அமைந்துள்ளது.

பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தால், இன்று நடைபெற்ற நடேசனின் கொலை தவிர்க்கப்பட்டிருக்கலாம். இப்போது நடேசனின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கென விசேட விசாரணைக் குழுவை அரசு அமைத்துள்ளது. இதுவும் இது வரை வந்து போன வழமையான விசாரணைக்குழுக்கள் போன்றே வெறும் கண் துடையபுக்கான குழுவாக அமையும் என்பதை எதுவித தயக்கமுமின்றி முன்னரே கூற முடியும்.

கொலை நடைபெற்று முடிந்த பின்னர் தமிழ்த் தேசியத்துக்கு வலுவான ஊடகவியலாளர் இழக்கப்பட்ட பின்னர் விசாரணைக் குழுக்களை அமைப்பதைக் காட்டிலும் நடேசனின் கொலை நடை பெறாமல் தவிர்த்திருககமுடியும், தடுத்திருக்க முடியும்.

கூப்பிடு தொலை தூர்த்திலே இராணுவத்தினர் காவலில் இருகக அதுவும் சோதனைச் சாவடிகள் அமைத்திருக்க ஆயுததாரிகள் எது வித சிரமமுமின்றி, அசசமு மின்றி பட்டப்பகலிலே நாயைச் சுடுவது போல ஒரு ஊடகவியலாளனைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்றால், இந்தக் கொலை எவ்வாறு நடந்தது? யாரால் மேற்கொள்ளப்பட்டது? யாருடைய அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்டது? என்ற வினாக்களுக்கு சிறு குழந்தைகூட பதில் சொல்லும்.

தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான கருத்துடையவர்கள் அதற்காகக் குரல் கொடுப்பவர்கள், உழைப்பவர்கள் எனக் குறிவைக்கப்பட்டு, அடுத்தடுத்துக் கொலைகள் மட்டக்களப்பிலே நடைபெற்று வருகின்றன.

கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தம்பையாவின் கொலையும், நடேசனின் கொலையும் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் தமிழழ விடுதலைப் புலிகளின் தலைமையும் தமிழ்த் தேசிய இனம்,மரபு வழித் தாயகம் என்னும் உணர்வுகளும் மேலும் வலுப்பெற்றுவருவதை விரும்பாத பிரதேசவாத, இனவாத சக்தி ஒனறே தொடர்கதைகளில் தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. இதற்குத் தற்போதைய அரசும் உறுதுணையாக நினறு செயற்பட்டு வருகிறது. இந்த நிலைப்பாடு தொடருமாக இருந் தால், விடுதலைப் புலிகள் விரும் பியோ, விரும்பாமலோ தமது நிலைப் பாட்டில் பின்வாங்க வேண்டிய காலத்தின கட்டாயம் எழும். அந்த நிலை ஏற்படாமல் பாதுகாப்பது சர்வதேசத்தின் கடமையாகும்.

அரசின் அராஜகச் செயலுக்கு பழிவாங்க முடியாமல் தமது கைகள் கட்டிப் போடப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.பதமிழ்ச் செல்வன் தன்னிடம் தெரிவித்ததாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஊடகங்களுககு கருத்து வெளியிட்டுள்ளார். இவரது கருத்தின் அர்த்த ஆழம் தென்னிலங்கை அரசியற் தலைமைகளுக்கு தெளிவாகப் புரிந்து கொள்வது நன்மை பயக்கும் விடயமாகும்.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும்படி விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை சமாதானப் பாதைக்கு எதிராக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கவனம் எடுக்க வேண்டும். அது தொடர்பாகவும் அரசிற்கு தமது அழுத்தத்தை பிரயோகிகக வேண்டும். அதைவிடுத்து தனித்தரப்பாக புலிகளுக்கு மட்டும் அழுத்தம் கொடுப்பது இருவழிச் சமாதானப் பயணத்திலே எது வித முன்னேற்றத்தையும் தரப்போவதில்லை.

நடேசனின் கொலைக்கும், அரசுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக விடுதலைப் புலிகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக சமாதான அழுத்த சக்திகள் அரசிடம் விளக்கம் கோர வேண்டும்.

சந்திரிகா தலைமையிலான அரசு ஊடகவியலாளர்களுக்கு அதுவும் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இழைத்துவரும் தொடர் அநியாயங்களை இனியாவது நிறுத்தத்தக்க வகையிலே அரசுக்கு சர்வதேச சக்திகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஒரு அடக்கப்பட்ட இனத்தின் உணர்வுகளை எழுத்து மூலமாக வெளிப்படுத்துவதையே விரும் பாது அதற்குக் காரணமானவர்களை பழிவாங்கும் அரசு எவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைகளை இதயசுத்தியோடு மேற்கொள்ளுமென எதிர்பார்ப்பது. மட்டக்களப்பிலே தமிழ் தேசியத்திற்கு எதிராக கிளம்பிய கருணாவின் பிரச்சினையையும் அதற்கு எவ்வாறு அரசு துணை போகிறது என்பது பற்றிய் உண்மை நிலைகளை வெளிப் படுத்தியமைக்கான பரிசாகவே நடேசனின் கொலை நடந்திருக்கிறது. கருணாவால் கிளப்பப்பட்ட பிரதேசவாதப்பிரச்சினையின் சுயலாப தாற்பரியத்தை மட்டக்களப்பு மக்களுக்கு ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்திய 'குற்றத்திற்காகவே' நடேசனுக்குக் கொலைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது அரசபடைகளின் அனுசரணைகளுடனே நடந்தேறி இருப்பதற்கான கருத்தாதாரங்கள் நிறையவே உள்ளன.

உண்மையிலேயே அரசு விசுவாசமாக சமாதான நகர்வுகளை மேற்கொள்வதாயின் முதற்கட்டமாக நடேசனின் கொலைச் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும், தகுந்த தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

விசாரணைக்குழுக்களை அமைத்து இழுபறி விசாரணைகளை மேற்கொண்டு இறுதியிலே எதுவித தீர்வுகளும் கிட்டாமற் போவதே வழமை என்றால் தமிழ் மக்கள் நிச் சயமாக பிரிந்து சென்று தமக்கென ஓர் ஆட்சி முறையை சட்ட வரை முறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியது காலத்தின தேவையாகும்.. அதற்கு அரசு தானாக இடம ளிக்கப் போகிறது.

நடேசனின் கொலைக்கு பல அமைப்புக்கள், கட்சிகள், அரசியற் தலைவரிடமிருந்து கண்டனக் கருத்துக்கள் வெளி வந்தவண்ணமே உள்ளன. அரசுடன் இணைந்து செயற்படும் இனவிரோத சக்திகளும் இது தொடரபாக வெளியிட்ட தமது கருத்துக்களில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும், நிறுத்தப்பட வேண்டுமெனவும், அது அநாகரிகமான செயல் என்ற கருத்துப்படவும் தெரிவித்துள்ளனர்.

இது 'ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி' என்பது போல அமைந்துள்ளது. நிமலராஜனின் கொலைக்கும் ஈ.பி.டீ.பியினருக்கும் இடையே தொடர்பு இருப்பதாக கூறப்படும் வேளையிலே அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கருத்து பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.



ஊடகவியலாளர்களை மதிக்காது நிமலராஜனைக் கொலை செய்ததாக கூறப்பட்டும். நெல்லியடியில் வைத்து ஊடகவியலாளர்களை மோசமாக தாக்கி காயப்படுத்தியும், மானிப்பாயில் வைத்து தாக்கியும், அட்டகாசம் புரிந்த இன விரோத சக்திகள் ஊடகவியலாளர் நடேசனின் கொலைக்கும் அனுதாபம் தெரிவிப்பது வேடிக்கையான விடயமாகவுள்ளது.

'ஆடு நனைகிறதென ஓநாய் அழுத கதை' போல இத்தகைய சக்திகளின் செயற்பாடுகள் அமைந்துளளது. நடேசனின் கொலை தமிழ ஊடகவியலாளர்களின் பாதுகாபபை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஜனநாயகத்தை விதைப்பதைக் காட்டிலும் ஜனநாயகப் பண்புகளை ஒவ்வொருவரிடமும் விருத்தி செய்ய வேண்டும். இதன் மூலமாகவே சமாதானம் சுவைக்கும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதிலே பல தடைக்கற்கள் முன்னே குவிந்து கிடக்கின்றன. அமைச்சர் கதிர்காமரின் செயற்பாடுகளும், கருத்துக்களும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பாதகமாக அமைந்து வருகிறது.

இந்தியாவை எப்பாடுபட்டாவது மீண்டும் இலங்கை இனப்பிரச் சினை விவகாரத்திலே நுழைத்து விட வேண்டும் என்பதிலே அவர் குறியாகவுள்ளார். இதற்காக புதிய அரசு பதவியேற்க முன்னரே அவர இந்தியாவிற்கு பறந்தோடி விட்டார். அங்கு புதிய வெளிநாட்டு அமைச்சரையும், வேறு முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து திரும்பியுள்ளார்.

அத்தோடு, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதிலும் அவர் குறியாகவுள்ளார். இதற்காக இவர் இந்திய பாதுகாப்பு அமைச்சரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அரசு ஒரு புறம் - சமாதானம் சமாதானம் பேணுவோம் என குரல் கொடுத்தவாறு மறுபுறம், போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதிலும் குறியாகவுள்ளது.

பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல அயல் வீட்டிலே புதிய அரசின் பாதுகாப்பு அமைச்சராக முன்னால் இந்திய இலங்கைத் தூதுவர் டிக்ஷிற் நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்தையுடையவர். இவரை இலங்கையின் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குள் தலையிட வைத்து அவற்றை சீர்குலைப்பதற்கான பின்னணி முற்சிகள் நடைபெற்று வருகின்றன.

சமாதானத் தேரை இழுத்துச் செல்வதிலே விடுதலைப் புலிகளும், நோர்வே அரசும் மடடுமே, முழுமையான அக்கறை எடுத்துச் செயற்படும் போது பல தரப்புக்கள முட்டுக் கட்டை போட்டு தேரைத் திருப்புவதிலே குறியாகவுள்ளனர்.

இலங்கைத் தீவிலே சமாதானம் தோன்றி அமைதி நிலை பிறந்து பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை ஆளும் முதலாளிவர்க்க அரசுகளால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதே இதற்கான காரணமாகும். இதனாலேயே பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களினை கைச்சாத்திடுவதைக் காட்டிலும், பாதுகாப்பு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதிலே குறியாகவுள்ளனர்.

இவ்வாறு, சமாதானப் பாதைக்கு முன்னால் அகற்றப்பட வேண்டிய தடைகள் ஆயிரம் உள்ளன. முதற்கட்டமாக தொடரும் மட்டக்களப்பின் மர்மக் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். கருத்துச் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் அனு மதிக்கப்படுவதை விட அதற்கான வரவேற்பு அதிகமாக இருக்க வேண்டும். நியாயமான கருத்துக்களுக்கு கர்த்தாக்களாக விளங்கும் ஊடகவியலாளர்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்துச் செயற்படவேண்டும்.

மூத்த ஊடகவியலாளர் நடேசனின் கொலையுடன், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். சமாதானப் பேச்சுவார்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையாவது அரசு எடுக்கவிரும்பின் தமிழினத் துரோகி கருணாவுக்கு ஆதரவளிப்பதை நிறுத்துவது முதற்படியாக அமையுமெனில் அதுவே, பெரியதொரு தடையைத் தாண்டிய பலத்தைத்தரும்.

ஏனெனில் தற்போது எழுந்து வரும் சில அசாதாரணச் சூழல்களுக்கு ஆணிவேராக கருணாவின் துரோகத்தனமே வேரூன்றியுள்ளது. இந்த நச்சு விதைக்கு தண்ணீர் ஊற்றி வளர்த்து நாட்டுக்கு நச்சுப் பழங்களை விழுவதை நிறுத்தி நச்சு மரத்தின் வேரை அடியோடு சாய்த்திட வேண்டும். அப்போது சமாதானம் என்பது கைக்கெட்டிய விடயமாக மாறிவிடும் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும், அனுமதிப்பதைவிட அதற்கான வரவேற்பு அதிகமாக இருக்க வேண்டும். நியாயமான கருத்துக்களுக்கு கர்த்தாக்களாக விளங்கும் ஊடகவியலாளர்க்கு பக்கச் சார்பானவர்கள் என சாட்டப்படும் குற்றச்சாட்டை நிறுத்தி அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.

சிந்தனைக்கு

*பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள்தெவ்ஓர்*
*எழுபது கோடி உறும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதான முயற்சிகளை பாதிக்கும் டிக்ஸிற்றின் யோசனைகள்

"இந்தியாவின் உதவிகளைப் பெற்று அரசியல் ரீதியாகப் பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்த பின்னரே இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்."

-இது முன்னர் இலங்கைக்கான இந்தியத் தூதரும், தற்போதைய இந்தியாவின் தேசியப்பாதுகாப்பு ஆலோசகருமான ஜே.என். டிக்ஸிற் இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள செவ்வியின் போது திருவாய் மலர்ந்தருளிய கருத்து அல்லது யோசனையாகும்.

-1987 ஜுலையில் இந்தி அரசு இலங்கை அரசுடன் மேற்கொண்ட இந்திய இலங்கை உடன்பாட்டின் சூத்திரதாரிகளுள் ஒருவரான டிக்ஸிற் அந்தக் காலத்திய ராஜதந்திர நடவடிக்கைகளின் தூரநோக்குத் திறனற்ற தன்மையானது, அந்த இரு நாடுகளுக்கும் மட்டுமல்ல ஈழத்தமிழ் மக்கள் அனைவருக்கும் ஏற்படுத்திய அழிவுகள் அளப்பரியனவாகும்.

-இந்தியா எந்த நோக்கத்துடன் இந்த உடன்பாட்டை அவசர அவசரமாக மேற்கொள்ள முனைந்ததோ அல்லது அந்த உடன்பாட்டின் உடனடி மற்றும் காலப்போக்கிலான தாக்கங்கள், விளைவுகள் குறித்த சிந்தனை ஏதுமின்றி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அந்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள எந்த இலக்குடன் முன்வந்தாரோ அந்த இரண்டுமே இறுதியில் சாத்தியமற்றுப் போய் இரு நாடுகளுக்குமிடையே புதிய சில பிரச்சினைகள் உருவாகி இருதரப்பினருக்குமிடையே சில காலம் கசப்புணர்வுடன் கூடிய உறவு நிலை தொடரவும் வழிவகுத்தது.

-1987 மத்தியில் ஆரம்பமான இந்தக் கசப்புணர்வு உறவு நிலையானது 1994 வரை நீடிக்கவே செய்தது. இதற்கு இலங்கை இனவிவகாரத்தின் ஆழமூலங்களை ஆராயாது, விடுதலைப்புலிகள் தமது நியாயபூர்வமான இலட்சியத்தின் மீது கொண்டுள்ள பற்றுறுதியின் வலிமையையும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் மீது கொண்டுள்ள பாசம் மற்றும் நம்பிக்கையின் உறுதிப் பிணைப்பையும் சரியாக மதிப்பீடு செய்யாது தமிழர் பிரச்சினையை இந்தியாவின் புவிசார் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள தமக்கேற்ற வகையில் கையாள முனைந்த தவறான அணுகுமுறைகளே காரணமாகும்.

-இதனைத் தமிழ் மக்களும், சர்வதேச சமூகமும் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள அனைத்து நேர்மையான ஜனநாயக சக்திகளும் கூட நன்கறியும்.

-இந்த தவறான அணுகுமுறையை இந்தியா மேற்கொள்ள அதற்கு தவறான மதிப்பீடுகளை வழங்கியதுடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தனது அரசியல் இலக்கினை அந்த உடன்பாட்டின் ஒரு வகையில் எட்ட உதவியவர் இதே ஜே.என்.டிக்ஸிற் தான்.

-இந்திய இலங்கை உடன்பாட்டை அடுத்து ஏற்பட்ட அனைத்து அனர்த்தங்களையும், அதன் பின்விளைவுகளையும் இந்தியாவும் இலங்கையும் எதிர்கொண்ட விதம் அந்த வரலாற்றுத் தவறு குறித்து உலக சமூகத்திற்கு பல்வேறு அனுபவங்களைக் கற்றுத்தந்தன.

ஆனாலும், இலங்கையும் இந்தியாவும் அதிலிருந்து கற்றுக்கொண்டு அதே போன்ற தவறுகளை மீண்டும் செய்யாது தவிர்த்துக் கொள்வதற்கான பட்டறிவை பெறவில்லை என்றே தோன்றுகின்றது.

இந்திய - இலங்கை உடன்பாடு மற்றும் இலங்கையில் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகள் குறித்து இந்திய அமைதிப்படைக்கு அப்போது தலைமை தாங்கிய ஹர்கிரத்சிங், தீபேந்தர்சிங், சாதேஷ்பாண்டே போன்ற உயர் இராணுவ அதிகாரிகளும் ஏன் இதே டிக்ஸிற்றும் கூட எழுதிய நூல்களில தங்களின் செயற்பாடுகள், தங்களின் அரசின் கட்டளைகள் மற்றும் நெறிப்படுத்தல்களால் ஏற்பட்ட அவலங் கள் குறித்தும் தங்களின் தவறுகள் குறித்தும் வெளிப்டையாகவே எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக ஜே.என்.டிக்ஸிற் இராஜதந்திரப் பதவிகளில் இருந்து விலகிய பின் எழுதிய 'Assignment In Colombo' என்ற நூலில் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகை கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விகள் ஆகியவற்றில் பல இடங்களில் தாம் விட்ட தவறு களை ஒப்புக்கொண்டிருந்தார் என்பதும் கவனத்தில் கொள்ளப் பட வேண்டிய விடயமாகும். 'தான் தனது சுக்கானைப் புகைத்து முடிப்பதற்குள் விடுதலைப்புலிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவார்' என விலாசக் கதை பேசிய அவர் இப்பொழுது பதினேழு வருடங்களின் பின்னர் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்ற பின்னர் மீண்டும் முன்னர் விட்ட அதே தவறை விடத் தயாராகிறார் போலுள்ளது.

கடந்த ரணில் ஆட்சிக்காலத்தில் இராணுவச் சமநிலை பேணப்படுதல் என்பது புரிந்துணர்வு உடன்பாட்டில் முக்கிய அம்சமாக ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைகளில் அரசும் புலிகளும் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது புதிதாக அரசியல் பலம் என்ற பெயரில் அரசியல் மேலாதிக்க நிலை அவசியம் என இலங்கை அரசுக்கு அவசியம் என்றும் அந்த மேலாதிக்க நிலையில் இருந்து கொண்டே அரசு புலிகளுடன் பேசவேண்டும் எனவும் புதிய ஆலோச னையை வழங்கி பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளார்.

அதற்கு இந்தியா உதவும் எனவும் இந்தியாவின் உதவியுடன் தான் அந்த அரசியல் மேலாதிக்க நிலையை இலங்கை அரசு எட்டவேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளமையானது கதிர்காமரின் கெஞ்சல் அழைப்புக்கு இந்தியா கருணை காட்டத் தொடங்கிவிட்டதோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது.

எதுவானாலும் சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிகரமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டுமானால் விட்ட இடத்திலிருந்து ஆரம்பமாக வேண்டும் என்ற தமிழர் தரப்பு நிலைப்பாட்டை இப்படியான செயற்பாடுகளின் மூலம் இந்தியா வெளிப்படையாக நிராகரிப்பதுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் கையறு நிலைக்கு கைகொடுத்துதவ முன்வந்துள்ளது என்றே கருதக் கூடியதாகவுள்ளது.

எந்த வகையிலும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களை குழப்பவே இவ்வாறான யோசனைகள் உதவும் என்பதை டிக்ஸிற் போன்றவர்கள் தெரிந்து கொண்டு தான் இச் செயல்களில் இறங்கியுள்ளனர் என்ற அரசியல் நோக்கர்களின் கருத்தை எவரும் நிராகரிக்கவே முடியாது.

## நாடும் நடப்பும்




# புலிகள் தொடர்பாக இந்தியா கருத்து எதுவும் வெளியிடவில்லை

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான எந்தவித கருத்துக்களையும் தனது விஜயத்தின்போது இந்தியா வெளியிடவில்லை என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக கருத்துக்களை இந்தியா வெளியிட்டதா என கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரைத் தான் சந்தித்துக் கலந்துரையாடியதாக தெரிவித்த லக்ஷ்மன் கதிர்காமர் - ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக இந்தியத் தலைவர்கள் தம்மிடம் எதுவித கருத்துக்களையும் வெளிப்படுத்தவில்லை எனவும் கூறியுள்ளார்.

## பொலிஸ் காவலில் இருந்த சந்தேகநபர் தற்கொலை!

காலியில் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

கைக்குண்டை வைத்திருந்ததாக கைதுசெய்யப்பட்டிருந்த இந்த நபர், தனது நீளக் காற்சட்டையினை கழுத்தில் மாட்டியே தற்கொலை செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

காலி, டன்கெதர என்னுமிடத்தைச் சேர்ந்த புஸ்கொலவகே ஜெகத் நிசாந்த (வயது 39) என்ற இந்த நபர், தனது மனைவியை கொலைசெய்து எரித்தமை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையில், தனக்கெதிரான தண்டனைகள் கடுமையானவையாக இருக்கலாம் எனப் பயந்தே, இவர் தற்கொலை செய்திருக்கலாமென காலி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நிஹால் கலன்சூரிய தெரிவித்தார்.

பொலிஸாரின் தடுப்புக்காவலில் உள்ள கைதிகள் அண்மைக்காலமாக தற்கொலைசெய்து கொள்ளும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நட்டஈடு வழங்கக்கோரி ஒலுவிலில் ஆர்ப்பாட்டம்

ஒலுவில் துறைமுகத்துக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் நேற்று போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

கடந்த அமைச்சரவையில் தமக்கு நட்டஈடாக வழங்க அன்றைய அமைச்சரவை 540 மில்லியன் ரூபாவை அங்கீகரித்த போதும், தேர்தலைக் காரணங்காட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனை நிறுத்திவைத்தார். ஆனால், தேர்தல் முடிவடைந்து மூன்று மாதங்கள் சென்றபோதும், எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாமை குறித்து இந்தப் போராட்டத்தின்போது காணி உரிமையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் ஆலமுனை உதுமாபுரம் என்ற இடத்திலிருந்து பேரணியாகப் புறப்பட்ட ஒலுவில் துறைமுக திட்ட அலுவலகம் வரை வந்து அங்கு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒலுவில் துறைமுக அமைப்புக்காக டென்மார்க் அரசாங்கத்தின் அனுசரணையுடன் 3600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக 223 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதனால், சுமார் 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (05)

## வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு சிங்கள மாணவர்கள் திரும்பினர்!

வவுனியா கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறிய சிங்கள மாணவர்களில் 75 சதவீதமானோர் நேற்றுமுன்தினம் அவர்களின் பெற்றோர் சகிதம் கல்லூரிக்குச் சமுகமளித்தனர். ஏனையவர்கள் இன்று வருகை தருவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தமக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து கடந்த வாரம் சுமார் 158 சிங்கள கட்டுறு ஆசிரிய மாணவர்கள் கல்லூரியில் இருந்து வெளியேறியிருந்தனர். இதற்கிடையில், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையைக் கண்டித்து பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் எச்சரித்துள்ளனர். (01)

## நாளை நடைபெறவுள்ள இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழாவுக்கு தெற்கு, கிழக்கிலுமிருந்து எழுத்தாளர்கள்

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழாவுக்கு தென்னிலங்கையில் இருந்து மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, கவிஞர் மேமன்கவி, படைப்பாளிகளான ஜின்னாஹ் ஷெரிப்தீன், கே.விஜயன், ப.ஆப்டீன், புலோலியூர் அ.இரத்தின வேலோன், சுதாராஜ் ஆகியோரும், மலையகத்திலிருந்து அந்தனி ஜீவா, சாரல் நாடன், புலோலியூர் க.சதாசிவம், ஞானம் ஆசிரியா ஞானசேகரன், பேராசிரியர் சி.சிவசேகரம் ஆகியோரும், கிழக்கில் இருந்து எழுத்தாளர் ச.அருளானந்தம், ஓ.கே.குணநாதன், கவிஞர் எஸ்.முத்துமீரான், எம்.என்.அமானுல்லா, ஏ.எஸ். உபைதுல்லா ஆகியோரும், வன்னியிலிருந்து கவிஞர் அமரதாஸ், தமிழ்க்கவி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் மூத்த, இளைய படைப்பாளிகள் அனைவரும் கலந்துகொள்ளவிருக்கும் இந்த விழாவில், பரிசளிப்பு உரையை மூதறிஞர் சிற்பி சரவணபவனும் சிறப்புரையை ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர். ஆசியுரையை நல்லை குருமகா சந்நிதானம் வழங்குவார்.

தொடர்ந்து பரிசளிப்பும், கௌரவித்தலும் எழுத்தாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனைவரையும் நாளை காலை 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு வருகை தருமாறு இலக்கியப் பேரவையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

ஜூன் 5 ஆம் திகதி நினைவாக....

~ சிலம்பு



- பொன். சிவகுமார் -



- மேஜர் முரளி -

# ஈழத்தமிழர் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட நாளாக அமைந்துவிட்ட ஜூன் 5 ஆம் திகதி

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திகதியும், ஏதோவொரு வகையில், முக்கியத்துவமுடையதாகவே விளங்கும். அவை ஈகம் நிறைந்த நாட்களாக இருக்கும் - வீரம் செறிந்த நாட்களாக இருக்கும் - அவலம் நிறைந்த நாட்களாகவும் இருக்கும் - புறநானூற்றுக்குப் புதுவடிவம் கொடுத்த நாட்களாக இருக்கும் - ஆனால், ஜூன் 5 இவற்றிற்கு மாறுபட்ட நாளாக ஈழத்தமிழர் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட நாளாக அமைந்துவிட்டது.

தமிழ் மக்களது உரிமைகள் பறிக்கப்படுவதற்கு கால்கோலாக குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. அதன் பின்பு தமிழ் மண் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பறிக்கப்பட்டது. இந்த காலகட்டத்தில்தான் மொழியுரிமையிலும் கை வைத்தது சிங்கள அரசு. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் இவை மிகவும், நாசுக்காகத் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இவற்றைத் தடுக்க முற்படாது, தமிழ் அரசியல்வாதிகள் ஆட்சியாளர்களுடன் ஒட்டியுறவாடிக்கொண்டிருந்தனர். ஆனால், தந்தை செல்வாதான் இந்த ஆபத்தைக் கண்டு மக்களுக்கு விளக்கி நிலமையைப் புரிய வைத்தார் என்பது, வரலாற்று உண்மையாகும்.

**அரசை எதிர்த்துப் போராடிய ஒரு வீரனுக்கு முதல்முதலில் உருவச்சிலை நிறுவப்பட்டது சிவகுமாரனுக்கேதான். 1975 ஆம் ஆண்டு ஜூன் 5 இல் பாரிய எதிர்ப்புக்கள் மத்தியில் துரோகத்தனங்களை முறியடித்து சிவகுமாரனின் சிலை உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் நிறுவப்பட்டது. இலங்கைப் படைகளாலும் இந்தியப் படைகளாலும் அவரது சிலை இடித்து நொருக்கப்பட்டது. ஆனால் இன்றும் அவரது சிலை அங்கே கம்பீரமாக எழுந்துநிற்கின்றது. அது ஜூன் 5 ஐ என்றும் நினைவு கொள்ள வைத்துக்கொண்டிருக்கும்.**

இந்த நேரத்தில்தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை நிறுவிய காலஞ்சென்ற எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தான் ஆட்சிக்கு வந்தால் - 24 மணிநேரத்தில் சிங்களம் மட்டும் நாட்டின் ஆட்சி மொழியாக்கப்படும் என்று கூறினார். இதனைப் பார்த்த ஐக்கிய தேசியக் கட்சியும், சிங்களம் மட்டுமே என்று வெளிப்படையாகக் கூறியதுடன் களனி என்ற இடத்தில் நடந்த கட்சி மாநாட்டில், தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால், சிங்கள மக்கள் பண்டாரநாயக்காவை 1956 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஆட்சியமைக்க தேர்ந்தெடுத்தனர்.

பண்டாரநாயக்கா பிரதமராக வந்ததும் தான் சிங்கள மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியின் படி 1956 ஆம் ஆண்டு ஜூன் 5 இல் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டவரைபை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார். எனவே, ஜூன் 5 மொழியுரிமை பறிக்கப்பட்ட நாளாக தமிழர் நெஞ்சங்களில் இடம்பிடித்துக்கொண்டது. இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும், உலக நாடுகளின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவும், தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் அப்போதைய நாடாளுமன்றம் அமைந்திருந்த காலி முகத்திடலிலே, ஓர் அறவழிப்போராட்டத்தினை நடத்தினர்.

அமைதி வழியில் தமது எதிர்ப்பினைக் காட்டிய தொண்டர்கள் மீது, சிங்களக் காடையர்களை ஏவிவிட்டு காலிமுகத்திடலில் குருதியோட வைத்தனர் ஆட்சியாளர்கள். அறவழியில் இருந்து எதிர்ப்புத் தெரிவித்தவர்களின் உடைகள் கிழிக்கப்பட்டன. காதுகள் அறுக்கப்பட்டன. மூக்குகள் உடைக்கப்பட்டன. பொல்லுகள் தடிகள் மூலம், தாக்கப்பட்டு குருதியோடச் செய்தனர். இலங்கையின் காவல்துறையினர், வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டு பிரதமர் பண்டார நாயக்கா நாடாளுமன்ற படிக்கட்டுக்களில் ஏறிச் சென்றார். அத்துடன் பண்டாரநாயக்கா நின்றாரா என்றால்...? இல்லை. நாமாளுமன்றுக்கு - காயங்களுக்குக் கட்டுப் போட்டுச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து வீரத்தழும்புகள் என்று நக்கல் செய்தார் அவர்.

இதே நாளில் தான் தென் தமிழீழத்தில் தமிழ் மக்கள் மீது வன்செயல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. திட்டமிட்ட குடியேற்றங்களால் தமிழ் மண்மீது சிங்களக் காடையர்களைக் குடியேற்றிய சிங்கள அரசு தமிழ் பெயர்களை மாற்றி கல்லோயா, அம்பாறை எனப் பெயரிட்டுவிட்டு, அப்பகுதியில் காலங்காலமாக வாழ்ந்த தமிழர்களை வன்செயல்கள் மூலம் விரட்டியடித்தது. இது தமிழ் மக்கள் மீது நடந்த முதலாவது பேரினவாத வன்செயல் ஆகும். இந்த நிகழ்வானது ஜூன் 5 ஐ மறக்கமுடியாத நாளாக்கியது.

இந்த 1956 ஆம் ஆண்டு ஜூன் 5 மேலும் ஒரு வகையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை இல்லை. பொருளியல் பிரச்சினை தீர்ந்தால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சிலர் கூறிவந்தனர். தொழிலாளர்கள் இனவேறுபாடின்றி போராடியபோது, கந்தசாமி என்ற தொழிலாளி இறந்துபோனார். அவரை நினைவுகூர்ந்து சிலை எழுப்பியிருந்தனர். ஆனால், தமிழனுக்கு ஒரு சிலையோ என்று கேட்டு, அந்தத் தொழிலாளியின் சிலை 1956 ஆம் ஆண்டு ஜூன் 5 இல் உடைத்து நொருக்கப்பட்டது. இதைப் பற்றி - தொழிலாளர் தலைவர்கள் என்று கூறியவர்கள் மௌனம் காத்தனர். தொழிலாளி என்றால்கூட அவன் தமிழன்தான் என்று வித்தியாசம் காட்டி உண்மையை உணரவைத்ததும் இந்த ஜூன் 5 ஆகும்.

இதற்கும் அப்பால் இந்த ஜூன் 5 இன்னுமொரு வகையில் மறக்கமுடியாத நாளாக தமிழர் வாழ்வில் நிலைத்துவிட்டது. சிங்கள ஆட்சியாளர்களின் தமிழின ஒழிப்பு மேலோங்கி வந்ததையும், அறவழிப் போராட்டங்கள் ஆயுதப்படைகளால் அடக்கப்படுவதையும் கண்டுகொண்ட இளைஞர்கள் உண்மையொன்றை உணரத்தொடங்கினர். அதுதான் அரச பயங்கரவாதத்தில் நின்று தமிழினத்தைக் காப்பாற்ற ஆயுதம் ஏந்துவதே ஒரே வழி என்று.

அந்த வகையில் வல்வெட்டித்துறையில் தோன்றி வரலாறு படைப்பவர் எமது தேசியத்தலைவர். இதே காலத்தில் உரும்பிராயில் தோன்றி வரலாறு ஆகிவிட்டவர். பொன். சிவகுமாரன். தூய்மையான ஒரு போராளியாக தமிழீழத்தில் உருவெடுத்த சிவகுமாரன் சிங்கள அமைச்சர் சோமவீர சந்திரியின் காருக்கு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் குண்டுவைத்து தகர்த்து தனது ஆயுதப்போராட்டத்தை தொடங்கினான். அவன் துரோகிகளை அழிக்க ஆயுதம் தாங்கினான். தமிழினத்தை ஏளனம்செய்த காவல்துறை உயரதிகாரிகளை ஒழித்துக்கட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினான். அவனது ஆயுதத் தாக்குதல்கள் பெரிய வெற்றிகளைக் கொண்டிருக்காது போனாலும் கூட சிவகுமாரன் என்றால்... தமிழினத் துரோகிகளும் சிங்கள ஆட்சியாளர்களும் கிலி கொண்டிருந்தனர்.

சிவகுமாரன் இறந்த பின்னர். சிங்கள ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற சில தாக்குதல் நிகழ்வுகளை சிவகுமாரன் இறக்கவில்லையோ என்ற ஐயத்துடன் அவனது வீட்டிற்கு காவல்துறையினர் சென்று சோதனையிட்டதன் மூலம் அறியலாம். இவ்வாறு இறந்தும் இறவா நிலையடைந்தவன் சிவகுமாரன்.



- உரும்பிராயில் உயர்ந்து நிற்கும் சிவகுமாரன்

சிவகுமாரன் இறந்த பின்னர், துரையப்பா தனது நண்பரிடம் தன்னுடன் அரசியலில் சேரும்படி கேட்டார். அவர் மறுத்துவிடவே துரையப்பா என்ன கூறினார் என்பது மறக்கமுடியாததாகும்.

'நண்பா பயப்படாமல் என்னுடன் அரசியலில் சேர்ந்துகொள். எங்களை இனி ஒருவரும் ஒன்றும் செய்யமாட்டார்கள். ஏனெனில் சிவகுமாரனைப்போல் யாருமே இப்ப இல்லை. அவனுடைய துணிவு வேறு எவருக்கும் வராது எனவே வந்துவிடு" என்றார்.

சிவகுமாரனால் முடியாத எத்தனையோ செயல்கள் அவனது மறைவிற்குப் பின் தமிழீழத்தில் நடந்துகொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழீழப் போராட்டத்தில் துடிப்புடன் விளங்கிய சிவகுமாரன் சமுதாய நீதிக்காகவும் அடிப்படை மனித உரிமைகளுக்காகவும் போராடினார். நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒரு தொண்டனாக அவர் பணியாற்றினார். அப்பொழுது அங்கு பணியாற்றிய தொண்டர்களின் தலைவனாக அங்கு அவர் காட்சியளித்தார்.

இன்று நீதிபதிகளாக இருக்கும் சிலர் அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் சிவகுமாரனின் தலைமையின் கீழ் தொண்டர்களாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழாராய்ச்சி மாநாட்டில் ஊர்திகள் உலாவில் பொலிஸார் சில ஊர்திகளுக்குத் தடை விதித்தபோது முன்னின்று குரல் கொடுத்து வெற்றி பெற்றவர் சிவகுமாரன். தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் சிங்களப் பொலிஸாரால் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து - அங்குநின்ற வெளிநாட்டு விருந்தினர்களை, ஆய்வாளர்களைப் பத்திரமாகக் காப்பாற்றி மதிலின் மேலால் அனுப்பியவர் - உடைகள் கிழிந்து அல்லலுற்ற பெண்களுக்கு தனது மேலங்கியை (சேட்)யும் நண்பர்களின் மேலங்கிகளையும் கொடுத்து மானங்காத்தவர் - தமிழாராய்ச்சி மாநாட்டு அனர்த்தங்களுக்குக் காரணமான பொலிஸ் உதவி அதிகாரியான சந்திரசேகராவை பழிவாங்க முயற்சித்து அதன்பின் தலைமறைவாகிவிட்டவர் சிவகுமாரன்.

சிவகுமாரனை தமிழாராய்ச்சி மாநாட்டைக் காரணம் காட்டி சிறையில் அடைக்க முற்பட்டவர்களுக்கு, சந்திர சேகராவின் மேல் நடத்தப்பட்ட தாக்குதல் தீனி போட்டதாகிவிட்டது. இதனால், சிவகுமாரன் தலைமறைவாகிவிட்டார். தலைமறைவாகிய சிவகுமாரனை இந்தியாவிற்குத் தப்பிச் செல்லுமாறு பலர் வலியுறுத்தினர். ஆனால், தனது மண்ணைவிட்டு எக்காரணம் கொண்டும் வெளியேறப்போவதில்லை என்றும் திடசங்கற்பம் பூண்டிருந்தார். ஆனால், சிவகுமாரன் நாட்டைவிட்டு வெளியேறப் பணம் தேவையென்று சிலர் கூறி யார் யாரிடமோ காசு கேட்டனர். அப்படிக் காசு தரும்படி கேட்கப்பட்டவர்களில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராவார்.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிவகுமாரன் தான் இந்தியாவிற்குச் செல்லப்போவதில்லை என்று தகவல் அனுப்பியிருந்தார். எனவே, ஏமாற்றிக் காசு பறித்துச் சென்றவர்கள் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் காசு தராததால்தான் சிவகுமாரன் இந்தியாவிற்குச் செல்லவில்லையென்று தவறான பரப்புரை செய்தனர். சிவகுமாரனுக்குப் பெரும் நிதியுதவி செய்தவர் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்பதுதான் உண்மை.

சிறையில் அடைக்கப்பட்ட பொழுதெல்லாம் சித்திரவதைகளை அனுபவித்தவர் சிவகுமாரன். வருங்காலத்தில் கைது செய்யப்படும் சூழ்நிலை வருமானால் சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவுவதென்ற முடிவுக்கு வந்திருந்தார். தனது போராட்டத்திற்குத் தேவையான 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 இல் மேற்கொண்டபொழுது பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். உடனே அவர் சயனைட் உட்கொண்டு தனது உயிரை விட்டுவிடுகின்றார்.

**தமிழீழத்தில் சயனைட் உட்கொண்டு முதற் தற்கொடையாளியாக வீரச்சாவடைந்தவராக மிளிர்கின்றார் பொன். சிவகுமாரன்.** இந்த வீரச்சாவால் ஜூன் 5 வரலாற்றில் அழியாத இடத்தைப் பொறுகின்றது.

வீரச்சாவடைந்த சிவகுமாரனுக்கு சிலை நிறுவ மக்கள் விரும்பினர். சாதாரண மக்களிடம் காசு சேகரித்து அந்தச் சிலை நிறுவப்பட்டது. சிலைக்குக் காசு சேர்த்த பொழுது தமிழீழ மக்களுடன் மலையக மக்களும் தமது பங்களிப்பை வழங்கியமை சிவகுமாரின் மீது அனைத்துத் தமிழ் மக்களும் கொண்டிருந்த அன்பு வெளிப்பட்டு நிற்கின்றது.

அரசை எதிர்த்துப் போராடிய ஒரு வீரனுக்கு முதல்முதலில் உருவச்சிலை நிறுவப்பட்டது சிவகுமாரனுக்கேதான். 1975 ஆம் ஆண்டு ஜூன் 5 இல் பாரிய எதிர்ப்புக்கள் மத்தியில் துரோகத்தனங்களை முறியடித்து சிவகுமாரனின் சிலை உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் நிறுவப்பட்டது. இலங்கைப் படைகளாலும் இந்தியப் படைகளாலும் அவரது சிலை இடித்து நொருக்கப்பட்டது. ஆனால் இன்றும் அவரது சிலை அங்கே கம்பீரமாக எழுந்துநிற்கின்றது. அது ஜூன் 5 ஐ என்றும் நினைவு கொள்ள வைத்துக்கொண்டிருக்கும்.

சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறையை ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழ் மக்களை எழுச்சி கொள்ளவைத்த நாளாக ஜூன் 5 விளங்குகிறது. தமிழர் வரலாற்றில் என்றும் நிறைவுகொள்ளத்தக்க நாளாக ஈகம் நிறைந்த நாளாக வீரம் நிறைந்த நாளாக இளைஞர்களை எழுச்சி கொள்ள வைத்த நாளாக ஜூன் 5 நினைவில் என்றும் நிலைத்துநிற்கும்.

# அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஷ் இத்தாலி, பிரான்ஸிற்கு விஜயம்!



(வோஷிங்ரன்)

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் நினைவுநாளை முன்னிட்டு அமெரிக்க அதிபர் புஷ், ஐரோப்பிய நாடுகளுக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு கட்டமாக அவர் இத்தாலிக்குச் சென்றுள்ளார்.

இத்தாலியின் தலைநகர் ரோமிற்கு ஜனாதிபதி புஷ் செல்வதற்கிடையில், ஈராக் போருக்கு அமெரிக்கா தலைமை தாங்குவதை எதிர்த்து இத்தாலிய மக்களால் ஆர்ப்பாட்டம், நடத்தப்பட்டது.

இத்தாலி சென்றுள்ள புஷ் அந்நாட்டு தலைவர்களைச் சந்திப்பதுடன், போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரையும் சந்திப்பார்.

அதிபர் புஷ் இத்தாலிய ஜனாதிபதி சில்வியோ பேலுஸ்கோனியின் மிக நெருங்கிய நண்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அமெரிக்கா தலைமையில் ஈராக்கிலுள்ள படையினரில் 2900 இத்தாலியப் படையினர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் இத்தாலியப் படையினர் நிலைகொண்டிருப்பதை போப்பாண்டவர் உட்பட இத்தாலிய மக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். இதற்காகவே அமெரிக்க அதிபர் புஷ் இத்தாலிக்குச் சென்றவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

இந்த வன்செயல் கலந்த ஆர்ப்பாட்டத்தையிட்டு தான் மிகவும் வருத்தமடைவதாக இத்தாலிய ஜனாதிபதி தெரிவித்தார். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் இத்தாலியின் வரலாற்றைப் புரிந்துகொள்ளவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இத்தாலியில் இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு அதிபர் புஷ் பிரான்ஸிற்குச் செல்லவுள்ளார். அங்கு அவர் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது உலக மகாயுத்த அறுபதாவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகளில் கலந்துகொள்வார்.

அதிபர் புஷ்ஷின் விஜயத்தை முன்னிட்டு பிரான்ஸின் நோமாண்டி பிரதேசத்தில் கடும்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் முப்பதாயிரம் பொலிஸாரும், 12000 இராணுவததினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் ஒரு இலட்சம் பேர் இந்தநிகழ்வில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபர் புஷ் உட்பட 17 உலகத் தலைவர்கள் நினைவுதின நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களில் இரண்டாம் எலிசபெத், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயர், ஜேர்மன் சான்சிலர் ஹேவாட், பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஸ் சிராக் ஆகியோரும் அடங்குவர்.

இதேவேளை, அமெரிக்க அதிபர் புஷ் ஐரோப்பிய நாடுகளுக்கு தற்போது மேற்கொண்டுள்ள விஜயம், ஈராக் தொடர்பான அமெரிக்காவின் தீர்வுத்திட்டம் தொடர்பாக நேட்டோ நாடுகளுக்கு விளக்க நல்லதொரு சந்தர்ப்பமென பி.பி.சி.செய்தியாளர் தெரிவித்தார்.

## மேடையில் தடுமாறிய புஷ்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள விமானப்படை பயிற்சி பள்ளியில் பயிற்சிமுடித்த மாணவர்களுக்குப் பட்டம் அளிக்கும் விழா நடந்தது. இதில் அதிபர் ஜோர்ஜ் புஷ் கலந்துகொண்டார். விழாமேடையில் அவர் பேச எழுந்தபோது கால் தடுமாறியது. அவரை அருகில் நின்ற விமானபடை அதிகாரி பால்டோர் கீழே விழாமல் தாங்கிப்பிடித்துக்கொண்டார்.

சிரித்துக்கொண்டே புஷ் சமாளித்துக்கொண்டு தனது உரையை ஆரம்பித்தார். அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலிலும் அவருக்கு தடுமாற்றம் ஏற்படுமா?

# சி.ஐ.ஏ அமைப்பில் இருந்து முக்கிய அதிகாரி பதவி விலகல்



அமெரிக்க சி.ஐ.ஏ புலனாய்வுப் பிரிவின் இரண்டாவது உயர் பதவியிலிருப்பவரான ஜேம்ஸ் பவிற்றி தனது பதவியிலிருந்து விலகிச் செல்லவுள்ளார். சி.ஐ.ஏயின் பணிப்பாளரான ஜோர்ஜ் ரீனேற் பதவி விலகிச் சென்றதற்கு அடுத்தபடியாக மிகமுக்கிய பதவியிலுள்ள ஜேம்ஸ் பவிற்றி விலகுவது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் பவிற்றியின் பதவி விலகல், ஜோர்ஜ் ரீனேற்றின் பதவி விலகலுடன் சம்பந்தப்பட்டதல்லதென சி.ஐ.ஏ தெரிவித்தது.

தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவே தான் பதவியிலிருந்து விலகுவதாக ஜேம்ஸ் பவிற்றி தெரிவித்தார். ஆனாலும் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் அமெரிக்காவில் நடந்த தாக்குதல் தொடர்பாக இவர்மீது விமர்சனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஈராக்கில் மறைத்துவைக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக சரியான தகவல்களை இவர் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் கூறப்பட்டது.

இவை தொடர்பாக இவர் மீது விசாரணை நடத்தப்பட இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜேம்ஸ் பவிற்றி 31 வருடங்கள் சி.ஐ.ஏயில் பணிபுரிந்துள்ளார். இதில் 5 தடவைகள சி.ஐ.ஏயின் நடவடிக்கை உதவிப் பணிப்பாளராக இருந்துள்ளார்.

சி.ஐ.ஏயில் கடந்த 31 வருடங்களாக இவர் பணிபுரிந்திருந்தாலும் வெளியே அறிந்திருக்கப்படவில்லை. செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பின்னரே இவர் வெளியில் அறியப்பட்டார்.

ஈராக்கில் சி.ஐ.ஏ சார்பான புலனாய்வு முகவர்களை உருவாக்கத் தவறியமை குறித்தும் இவர் மீது கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

ஜேம்ஸ் பவிற்றி தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்றாரே தவிர விலகிச் செல்லவில்லையென சி.ஐ.ஏயின் பேச்சாளர் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, சி.ஐ.ஏ அமைப்பிலிருந்து அதன் பணிப்பாளரும், உயர்பதவி வகித்த ஒருவருமென இருவர் ஒரே நேரதத்தில் விலகிச் செல்வது அந்த அமைப்பிற்கு சற்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சி.ஐ.ஏ அமைப்பின் பணிப்பாளராக இருந்த ரினேற்றின் இடத்திற்கு உதவி இயக்குநரான ஜோன் மைக்லோலின் தற்காலிகமாக நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# இராணுவப் பதற்றத்தைத் தணிக்க வட - தென்கொரியாக்கள் இணக்கம்

## விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்து



(சியோல்)

வடகொரியாவும், தென்கொரியாவும் இராணுவப்பதற்ற நிலையைத் தவிர்ப்பதற்கான பொதுவான உடன்படிக்கையொன்றை செய்து கொள்வதற்கு இணங்கியுள்ளன. இந்த உடன்படிக்கை வெகுவிரைவில் செய்துகொள்ளப்படுவதற்கு சாத்தியங்கள் இருப்பதாக தகவல்கள் தெரிவித்தன.

இரண்டு கொரியாக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் பின்னர் - ஜெனரல் தர அதிகாரிகளுக்கிடையிலான முதலாவது நேரடிச் சந்திப்பு கடந்தவாரம் இடம்பெற்றது.

வடகொரிய இராணுவ ஜெனரல் ஒருவர் இராணுவ அதிகாரிகள் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கி தென்கொரிய எல்லையைக் கடந்து வந்திருந்தார். தென்கொரிய அதிகாரிகளுக்கு கடற்படை அட்மிரல் ஒருவர் தலைமை வகித்திருந்தார்.

20 மணிநேரப் பேச்சுக்களின் பின்னர் இரண்டு தரப்பும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கு இணங்கியிருப்பதாக தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது, இரு நாட்டுக் கடற்படையினருக்கும் இடையிலான மோதல்களைத் தவிர்ப்பது குறித்து தென்கொரியா வலியுறுத்தியது.

இந்தச் சந்திப்பின்போது - வடகொரியா, இருநாட்டுக் கடற்படையினருக்கும் இடையிலான நேரடி தொலைபேசி இணைப்பை ஏற்படுத்துவதற்கு, பொதுவான வானொலித் தொடர்பு அலைவரிசையைப் பேணுவதற்கும் இணக்கம் தெரிவித்தது.

அண்மைக்காலமாக இரு நாட்டுக கடற்படையினரும் அடிக்கடி மோதிக்கொள்வதும், அதேவேளை உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருவதும் குறிப்பிட்டது.

அத்துடன் இந்தப் பேச்சுக்களின் போது வடகொரிய இராணுவத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில், பிரசார ஒலிபரப்புக்களை நிறுத்துவதற்கும், இலத்திரனியல் சமிக்ஞைகள் மூலம் குழப்பங்களை ஏற்படுவதைக் கைவிடவும் தென்கொரியா இணங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரியனன்மென் மாணவர் படுகொலை

# 15 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு சீனா, ஹொங்ஹொங்கில் அனுஷ்டிப்பு!

(பீஜிங்)

1989 ஆம் ஆண்டு சீன ரியனன்மென்னில் மாணவர் எழுச்சி அடக்கப்பட்ட 15 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தத் தினத்தை நினைவு கூரும் வகையில் சீனத் தலைநகர் பீஜீங்கில் நிலத்தில் சிலரைக் கிடத்திவிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று இழுத்துச் சென்றனர். ஆனால், இந்தத்தினம் சீனாவில் கொண்டாடப்படும் ஒரு நிகழ்வல்ல என சீனா தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தத் தினத்தைக் கொண்டாடுவதற்காக சுமார் அறுபதினாயிரம் பேர் ஹொங்ஹொங்கில் கூடியுள்ளனர்.

அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்பு - 1989 ஆம் ஆண்டு இந்த ஆர்ப்பாட்டத்தில் கைதுசெய்த 15 பேரையும் சீனா உடனடியாக விடுதலைசெய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால், இந்த 15 பேரும் வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனரென சீனாவில் இயங்கும் மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நினைவைக் கூரும்முகமாக சில மக்கள் ரியனன்மென்னில் கூடிகலைந்துள்ளனர். அத்துடன் ஐம்பது மக்கள் முழந்தாளிட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் 13 பொதுமக்கள் சீனப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சீனாவிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தும் கடும் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கொலைகள் தொடர்பாக சீன அரசாங்கம் சுதந்திர விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஹொங்ஹொங்கிலுள்ள விக்ரோறியா பூங்காவில் மக்கள் மெழுகுதிரியை ஏற்றி இந்தத் தினத்தை நினைவு கூர்ந்தனர்.



அறுபதினாயிரம் மக்கள் கூடுவர் என எதிர்பார்க்கப்படும் ஹொங்ஹொங்கில் பொலிஸார் நினைவு தினத்தை நடத்தவிடாமல் தடைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சீனாவுடன் இணைந்துள்ள தாம், ஜனநாயத்தை இழந்து வருவதாக ஹொங்ஹொங்கிலுள்ள ஜனநாயக ஆதரவுவாதிகள் தெரிவித்தனர்.

ஹொங்ஹொங்கில் நடைபெறும் இந்த நினைவு தின நிகழ்வுகளையிட்டு சீனா கடும் சினமடைந்துள்ளதுடன் 2007 ஆம் ஆண்டு ஹொங்ஹொங்கில் நடைபெறவுள்ள தேர்தல் மூலம் அந்த நாட்டிற்கு நேரடியாக ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதும் சாத்தியமில்லை எனவும் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஹொங்ஹொங் மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். எனவே அவர்கள் மௌனிகளாக இருக்கமாட்டார்களென ஹொங்ஹொங்கிலுள்ள மனித உரிமை கண்காணிப்பாளர் யுக் - காய் தெரிவித்தார்.

ஹொங்ஹொங் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம்முதல் சுலோகங்களை எழுதிவைத்து இந்த நினைவு தினத்தை அனுஷ்டித்துவருகின்றனர்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடலை வந்தடையும் பிளாஸ்ரிக் கழிவுகளால் சுமார் 1 மில்லியன் கடற்பறவைகளும், 1 இலட்சம் கடற்பாலூட்டி விலங்குகளும், எண்ணுக்கணக்கில்லாத மீன்களும் ஆண்டுதோறும் பலியாகிவருகின்றன.




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மூத்த பத்திரிகையாளர் கோபுவுடன் தேசியத் தலைவர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# நிவாரணம் வழங்குவதை தாமதித்தால் செயலகம்முன் தொடர்ச்சியாக மறியல்!

## பொது அமைப்புக்கள் அரசுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் யாழ்.குடாநாட்டு மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு மேலும் இழுத்தடிக்கப்படுமானால் யாழ்.மாவட்டச் செயலகம் முன் தொடர்ச்சியான மறியல் போராட்டம் நடத்தப்போவதாக யாழ்மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தவிடயம் குறித்து யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் புனர்வாழ்வு, புனரமைப்பு நிவாரண அமைச்சின் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.குடாநாட்டில் நீண்டகாலமாக வருமானமின்றி பல்வேறு கஸ்டங்களை அனுபவித்த ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து 282 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணப் பொருட்கள் இவ்வருடம் ஜனவரி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இயல்பு நிலை ஏற்படாத நிலையில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படாது கடந்த நான்கு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் ஆணையாளர் ஹரிம்பீரிஸை சந்தித்தபோது 6 மாத காலத்திற்கு நிவாரணம்பெறும் அனைவருக்கும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு உறுதியளித்திருந்தார்.

எனினும் உறுதியளிக்கப்பட்டதைப் போன்று இன்னும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை. இதனால் நிவாரணம் பெற்று வந்த குடும்பங்கள் ஏமாற்றமடைந்துள்ளன.

இந்த நிலையில் முன்னர் வழங்கப்பட்டது போன்று உலருணவு பெற்று வந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கத் தவறின் யாழ்மாவட்டத்திலுள்ள நிவாரணப் பொருட்கள் பெற்றுவந்த மக்களை ஒன்று திரட்டி யாழ்.செயலகத்திற்கு முன் தொடர்ச்சியாக மறியல் போராட்டம் நடத்தப்படும். இதற்கு குடாநாட்டில் உள்ள பொது அமைப்புக்களும் முன்வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

### மூத்த...

உள்ளன.

இத்தகையதொரு சிறந்த பத்திரிகையாளன் தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றி பத்திரிகை உலகிற்கும், தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றுக்கும் பெரும் பணியாற்ற வேண்டும்.

அத்துடன், வளர்ந்து வரும் இளைய ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பதையும் தெரிவித்து அவரின் நீண்டகால சேவையை பாராட்டுவதோடு தொடர்ந்தும சிறப்பாகப் பணியாற்ற எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெட்டுக் ....

சடலமாகக் கிடப்பது குறித்து அறிந்து அங்கு சென்றார்.

இதையடுத்து வெட்டிக்காயங்களுடன் கிடந்தவர் தனது கணவரான சந்திரமோகன் என அவரது மனைவி அடையாளம் காட்டினார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சடலத்தை மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். (12,13,17)

### அன்புச்சோலை...

விசேட தளபதி கேணல் சூசை, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உட்பட பல பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டனர்.

தாய்க மீட்புப் போரில் தமது இன்னுயிர்களை ஈகம்செய்த மாவீரர்களின் பெற்றோர்கள் அன்புச்சோலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் படுகொலைகளுக்கு படையினர் பொறுப்பல்ல!

(கொழும்பு)

கிழக்கில் நடைபெறும் படுகொலைகளுக்கும் படையினருக்கும் தொடர்பு இருப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்து வரும் குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மறுத்துள்ளார்.

கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் படுகொலைகளுக்கும் படையினருக்கும், தொடர்பு இருப்பதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டுவதைப்போன்று படையினருக்குத் தொடர்பு இல்லை. இந்தச் சம்பவங்கள் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான படுகொலைகளைக் கண்டறிந்து அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பரடுகள் செய்வதுடன் படுகொலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாகவும் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# சமஷ்டி முறையில் சமாதானப் பேச்சுக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்கும்!

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வினை வழங்கி தீர்வு காணப்படவேண்டும். இதற்கு இந்தியாவின் ஆதரவு இருக்கும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு தெரிவித்தாக இந்திய தூதரக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்குச் சென்றிருந்த வேளை - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை இரண்டாக பிரிப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை என்றும்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வினை வழங்கி தீர்வு வழங்கப்படவேண்டும் இதற்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும்.

இவ்வாறு நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாத்து, இந்தப் பாரதூரமான சிக்கலுக்கு தீர்வு காணப்படவேண்டும் இதுவே இந்தியாவின் அபிலாசை எனவும் தெரிவித்தார்.

# இராணுவத்தினர் சார்பாக தென்பகுதி சட்டத்தரணிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் யாழ்.பஸ்நிலையப் பகுதியில் பத்திரிகை விற்பனை செய்த இளைஞன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் சார்பாக தென்பகுதி சட்டத்தரணிகள் ஆஜராகவுள்ளனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச சம்பவம் தொடர்பாக மூன்று இராணுவத்தினர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இராணுவத்தின் சார்பாக தமிழ்ச் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராக மறுத்த நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வேளையில் நீதிமன்றில் ஆஜரான இராணுவச் சட்டத்தரணி குருப்பு குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் சார்பாக தென்பகுதி சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகுவதற்கு ஒரு மாதகால அவகாசம் தரும்படி கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் இவ்வழக்கினை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# மூன்று வயது மகனை...

தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் வந்திருந்தார். நேற்று குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக ராஜ்குமார் தனது பிள்ளையை தலைகீழாக தூக்கி அடித்துக்கொன்று விட்டு தனது மனைவியின் இரு கைகளையும் வெட்டினார். இதன் காரணமாக அவரது ஒரு கை துண்டிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது மேற்படி நபர் தனது மாமியாரையும் வெட்ட முயற்சித்தார். இதனை அடுத்து மாமியார் தாக்கியதில் ராஜகுமார் தலையில் படுகாயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த மூவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ராஜகுமார், ஜெயந்திமாலா ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரணமடைந்த சிறுவனின் சடலம் வைத்திய பரிசோதனைக் காக மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (தீ,12, 202)

# பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு...

மாவட்டங்களைச் சேர்ந்தவை என நிதியமைச்சின் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த விண்ணப்பங்களில் கடந்தமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெறாதவர்களினதும், இந்த மாதம் 30 ஆம் திகதியில் 45 வயதுக்கு மேற்பட்டவரினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இத்துடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலையில் ஈடுபட்டுள்ளவர்களினதும் விண்ணணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சுக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் 12 ஆயிரம் வெற்றிடங்கள் இருப்பதாக நிதியமைச்சின் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருவதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் சுற்றுநிருபத்துக்கு அமைய விண்ணப்பங்கள் கிடைத்துள்ள பிரதேச சபைகளில் நேர் முகப்பரீட்சைகள் நடைபெறும்.

# சமாதான முயற்சிகளில்...

இருக்கிறோம் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்தின் சாதகமான பதிலை ஏற்றுக்கொண்டு தான் நாங்கள் எதிர்கால முன்னெடுப்புக்கள் பற்றி உறுதியான தீர்மானங்களை எடுக்கலாம்.

கிழக்கில் நடைபெறும் படுகொலைகள் ஒரு யுத்த நிறுத்த மீறலாகவே எங்கள் தலைமைப் பீடம் கருதுகிறது. இது சம்பந்தமான அதிகாரபூர்வ இறுதியான நிலைப்பாடுகளை நாங்கள் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

நேற்றுமுன்தினம் எங்கள் தளபதிகள் படைத்தரப்பினரிடம் நேரடியாக முறையிட்டிருக்கிறார்கள். இப்படியான நடவடிக்கைகளுக்கு இவர்கள் முடிவுகட்டாவிட்டால், இது யுத்தநிறுத்த சூழலையும், சமாதான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுசெய்வது மிகவும் கடினமாக இருக்கும் என்ற நிலைப்பாட்டை தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் கிழக்கிலே இப்படியானதொரு பதட்ட சூழலை உருவாக்குவது படைத்தரப்பினரால் பாதுகாக்கப்படும் குழுக்கள்தான் காரணமாகும்.

இதைக் கட்டுப்படுத்துகின்றவர்களுடைய பொறுப்பு படைத்தரப்புக்கு இருக்கின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்தப் பதட்டங்கள், படுகொலைகள் நிகழ்ந்துகொண்ருக்கின்து.

ஆகவே சட்டம் ஒழுக்கம் பேணுகின்ற பொறுப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் கையிலேயே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இந்தச்சட்டம் ஒழுங்கை பேணும் பொறுப்பு வருமாக இருந்தால், நாங்கள் இதனை பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவருவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## வாணி விலாஸ்
### வேலையாட்கள் தேவை

☆ வெளிநாட்டு, உள்நாட்டு சமையலாளர்
☆ சமையல் உதவியாளர்
☆ ஐஸ்கிறீம், சர்பத் மற்றும் குளிர்பான வகைகள் தயாரிப்பாளர்

★ தங்கி நின்று வேலை செய்வோருக்கு முன்னுரிமை
★ உணவு, தங்குமிட வசதி
★ தகுந்த வேதனம் வழங்கப்படும்

தகுதியுடையவர்கள் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வாணி விலாஸ்
76, K.K.S றோட்,
சுன்னாகம்.

(சி/2633)



## விற்பனை மேம்பாட்டாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையின், விற்பனை மேம்பாட்டு பகுதிக்கு ஆர்வமும், சுறுசுறுப்பும் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நீங்கள் ஆர்வமுடையவராயின் தங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 2004.06.10 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலயத்திற்கு வருகைதரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.